மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்
31 JAN 2001

பக்கம்: எட்டு
விலை ரூபா 5-00

# வலம்புரி
# VALAMPURI

ஓடர் நகைகள் 22 கரட்டில் குறித்த தவணையில் செய்து பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்

**அர்ச்சனா ஜுவலர்ஸ்**

176/1, நாவலர் வீதி,
118, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி-1931)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 தை 18 புதன்கிழமை (31-01-2001) தொலைபேசி: 3378 ஒலி: 43

## இடிபாட்டுக்குள் அகப்பட்ட புதுமணத் தம்பதிகள்
### உயிர் தப்பிய அதிசயம்

குஜராத் பூமியதிர்வில் நான்கு மாடிக் கட்டட இடிபாடுகளுக்குள் அகப்பட்ட புதுமணத் தம்பதியர் 36 மணித்தியாலங்களுக்குப் பின்னர் ஜோடியாக வெளியே வந்தனர். சிராக் (வயது-27), பியாலி (வயது-26) எனும் புதுமணத் தம்பதியினரே கட்டட இடிபாடுகளுக்குள்ளிருந்து மீட்புப் பணியாளர்களினால் ஜோடியாக மீட்கப்பட்டவர்களாவர்.

இத்தம்பதியர் வாழ்ந்த நான்கு மாடிக்கட்டடம் பூமி அதிர்ச்சி அனர்த்தத்தினால் இடிந்து தரைமட்டமானது. இடிபாடுகளுக்குள் சிக்கி உயிர்பிழைப்போமா என்பது நிச்சயமில்லாத போதும் இடிபாடுகளுக்குள் இருந்துகொண்டே திருமண பந்தத்தில் இணைந்த இன்ப அனுபவங்களை நினைவு கூர்ந்ததுடன் ஒரு சில வேடிக்கைத் துணுக்குகளையும் கூறி இருவரும் சிரித்துக் கொண்டோமென்று சிராக் கூறினார். (இ)

## யுத்த நிறுத்தத்தை அறிவிக்குமாறு நோர்வே தூதுவர் எரிக்சோல் அரசுக்கு அழுத்தம் கொடுப்பார்

(கொழும்பு)

நோர்வேயின் விஷேட தூதுவர் எரிக்சோல்ஹெய்ம் இன்னும் சில தினங்களில் கொழும்பு வரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு வரவுள்ள நோர்வேயின் தூதுவர் விடுதலைப்புலிகளின் சமாதானச் செய்தி ஒன்றை எடுத்து வரவுள்ளார். இந்தச் செய்தியில் விடுதலைப்புலிகள் யுத்த நிறுத்த அறிவிப்பை சந்திரிக்காவிற்கு தெரிவிப்பதுடன் அந்த அறிவிப்பை ஏற்று இலங்கை அரசு யுத்தநிறுத்த அறிவிப்பொன்றைபிரகடனப் படுத்துவதற்கான தூண்டுதலையும், நெருக்குதலையும் எரிக்சோல் கொடுக்கவுள்ளார்.

இதேவேளை அடுத்துஜனாதிபதி யுத்த நிறுத்த அறிவிப்பொன்றைவிடுப்பார்என தூதுவருடன்நெருங்கியவட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (வ)

## சிற்றி ஒவ் றிங்கோ நாளை புறப்படும்

'சிற்றி ஒவ் றிங்கோ' பயணிகள் கப்பல் நாளை400 பயணிகளுடன் காங்கேசன் துறையிலிருந்து திருமலை நோக்கி புறப்படவுள்ளது.

இக்கப்பலில் பயணம் செய்ய பயண அனுமதி பெற

→ 8ஆம் பக்கம் பார்க்க

## ★ சம்பளம் சலுகைகளை எதிர்பாராமல்
# புலிகளிடமிருந்து நாட்டைக் காக்க
# இளைஞர்கள் முன்வரவேண்டும்!

## கதிர்காமத்தில் பிரதமர் அறைகூவல்

(கொழும்பு விசேட நிருபர்)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு சுமார் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட இளைஞர்கள் இராணுவத்தில் இணைய வேண்டும். ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலும் இருந்து நூறு இளைஞர்கள் வீதம் இராணுவத்தில் சேர முன்வருவது அவசியமாகும்,

சம்பளத்தையோ, சலுகைகளையோ இளைஞர்கள் எதிர்பாராமல் இராணுவத்தில் இணைந்து நாட்டைக் காக்க முன்வரவேண்டுமென்று பெரும்பான்மை இனம் சார்ந்த இளைஞர்களுக்கு பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா அறைகூவல் விடுத்துள்ளார்.

## வவுனியாவில் படையினர் உஷார் நிலை
## பயப் பீதியில் மக்கள்

(வவுனியா)

வவுனியா இராணுவக் கட்டுப் பாட்டுப் பிரதேசத்தில் உள்ள இராணுவக் காவல் அரண்களை பலப்படுத்தும் வேலைகளில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இராணுவக் காவல் அரண்களை அண்டிய பகுதிகளில் மண்மூட்டைகள் அடுக்கப்படுவதுடன், முட்கம்பி வேலிகள் போடப்பட்டு, சோதனைகள் தீவிரப்படுத்தப்பட்டு, வருவதாக தெரிவிக்கப் படுகின்றது.

இராணுவத்தினரின் இத்தகைய நடவடிக்கைகளால் மக்கள் மத்தியில் பீதி நிலவுவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (ம)

யிலும் இருந்து நூறு இளைஞர்கள் வீதம் இராணுவத்தில் சேர முன்வருவது அவசியமாகும்,

சம்பளத்தையோ, சலுகைகளையோ இளைஞர்கள் எதிர்பாராமல் இராணுவத்தில் இணைந்து நாட்டைக் காக்க முன்வரவேண்டுமென்று பெரும்பான்மை இனம் சார்ந்த இளைஞர்களுக்கு பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா அறைகூவல் விடுத்துள்ளார்.

இராணுவத்திற்கு சுமார் பத்தாயிரம் வீரர்களைச் சேர்த்துக் கொள்ளும் ஊக்குவிப்பு நடவடிக்கையினை கதிர்காமம் புனித ஸ்தலத்தில் மத வழிபாடுகளுடன் ஆரம்பித்து வைத்து உரையாற்றிய பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா மேற்கண்டவாறு அறை கூவல் ஒன்றை சிங்கள இளைஞர்களுக்கு விடுத்துள்ளார்.

இந்த வைபவத்தில்பிரதமர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது;

### தொகுதிக்கு நூறு இளைஞர் அணிதிரள வேண்டும்

விடுதலைப் புலிகள் என்னதான் யுத்தநிறுத்தத்தை மேற்கொண்டு சமாதான முயற்சிகளில் ஈடுபட்டாலும் அதனை நாம் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. விடுதலைப் புலிகளின் சமாதானம் போலியானதென்பது அரசாங்கத்துக்கு நன்கு தெரியும். இதனால் தான் புலிகளுக்கு எதிரான யுத்தத்தைத் தொடர்ந்து நடத்த அரசு விரும்புகிறது.

ஒவ்வொரு தொகுதியில்

→ 8ஆம் பக்கம் பார்க்க)

வவுனியா இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ள இராணுவக் காவல் அரண்களை பலப்படுத்தும் வேலைகளில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இராணுவக் காவல் அரண்களை அண்டிய பகுதிகளில் ... வதுடன், முட்கம்பி வேலிகள் போடப்பட்டு, சோதனைகள் தீவிரப்படுத்தப்பட்டு, வருவதாக தெரிவிக்கப் படுகின்றது.

இராணுவத்தினரின் இத்தகைய நடவடிக்கைகளால் மக்கள் மத்தியில் பீதி நிலவுவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (ம)

# யாழ். மேல்நீதிமன்று நேற்றுமுதல் ஆரம்பம்
## வழக்குத் தாக்கலாகியது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட மேல் நீதிமன்றம் நேற்று ஆரம்பமான போது முதன் முதலாக சாவகச்சேரி மாவட்ட நீதி மன்றத் தீர்ப்பு ஒன்றினை ஆட்சேபித்து வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கினை வேலுப்பிள்ளை தவராசா என்பவரே தாக்கல் செய்தவராவார்.

யாழ்ப்பாணத்திற்கும சாவகச்சேரிக்கும் இடையே மதுபானங்களை அனுமதி இன்றி எடுத்துச் சென்ற குற்றச் சாட்டின் பேரில் வழக்குத் தாக்கல் செய்த போது சம்பந்தப்பட்ட வேலுப்பிள்ளை தவராசா விசாரணையின் பின் சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றினால்

(8ஆம் பக்கம் பார்க்க)

# வவுனியா ஆஸ்பத்திரியில் வேலை நிறுத்தம்
## சிகிச்சைகள் பாதிப்பு

(வவுனியா)

வவுனியா ஆஸ்பத்திரி டாக்டர்கள் மேற்கொண்டிருந்த வேலை நிறுத்தத்தினால் ஆஸ்பத்திரியின் இயல்பு நிலை பாதிப்படைந்தது.

இந்த வேலை நிறுத்தத்தினால், வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவும், மற்றும் சத்திர சிகிச்சைப் பிரிவும் இயங்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அதிதீவிர சிகிச்சைப் பிரிவு மட்டுமே இயங்கியதினால் ஏனைய பிரிவுகள் எதுவும் இயங்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

# புலிகள் யுத்தநிறுத்தத்தை விடுத்து பேச்சுவார்த்தைக்கு வரவேண்டும்
## கட்சிகளை வலியுறுத்தக் கோருகிறது அரசு

நிரந்தர சமாதானத்தை அடைவதற்காகத் தமிழீழவிடுதலைப் புலிகளுக்கு தமிழ் அரசியல் கட்சிகள் மற்றும் குழுக்கள் அழுத்தம் கொடுக்க வேண்டும்.

இது தொடர்பாக அரசாங்கம் தமிழ்க் கட்சிகள் மற்றும் குழுக்களுக்கு மேற் கண்டவாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.

யுத்தநிறுத்தமொன்றை ஏற்படுத்துவதற்காக, இராஜதந்திரிகளின் பின்னால் செல்வதைவிட நிரந்தர சமாதானமே சிறந்ததென்று அரசாங்கம்தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகள் தமது யுத்த நிறுத்த அறிவிப்பை நீடிப்பதை விடுத்து பேச்சுவார்த்தையின் அவசியம் பற்றி உணர வேண்டும். இதனை அரசாங்கம் மீண்டும்மீண்டும் பல தடவைகள் தெளிவு படுத்திவந்துள்ளதெனவிசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது. (இ)

# 5ஆயிரம்மெற்.தொன் சீனி
## இறக்குமதி செய்ய நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டில் சீனிக்குத் தட்டுப்பாடு ஏட்படுவதைத் தவிர்க்கு முகமாக 5ஆயிரம் மெற்றிக் தொன் சீனியை அரசு இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

தற்பேது களஞ்சியத்தில் பத்து நாட்களுக்குப் போதுமான சீனியே கையிருப்பில் உள்ளதால் கூட்டுறவு மொத்தவிற்பனை நிலயங்கள் மூலமாக ஒருவருக்கு 2கிலோ சீனி வழங்கப் படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(வ)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

இம்மாதம் 27ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி, வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்ட இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாகத் தரப்படுகின்றன.

### கரவெட்டி

| | |
|---|---|
| 143660 ஏ | 146154 ஏ |
| 146696 ஏ | 146696 பி |
| 150961 ஏ | 150961 பி |
| 151274 ஏ | 151274 பி |
| 151500 ஏ | 151500 பி |
| 151500 சி | 151501 ஏ |
| 151501 பி | 151501 சி |
| 153790 ஏ | 154759 ஏ |
| 154992 ஏ | 154992 பி |
| 154992 சி | 154992 டி |
| 158131 ஏ | 158131 பி |
| 158131 சி | 150131 டி |
| 158149 ஏ | 158149 பி |
| 158149 சி | 158223 ஏ |
| 158334 ஏ | 160186 ஏ |
| 160186 பி | 160244 ஏ |
| 160284 ஏ | 160284 பி |
| 160284 சி | 160284 டி |
| 162070 ஏ | 162070 பி |
| 162384 ஏ | 162384 பி |
| 162384 சி | 164123 ஏ |
| 164662 ஏ | 164874 ஏ |
| 165093 ஏ | 165250 ஏ |
| 165250 பி | 165292 ஏ |
| 165292 பி | 165297 ஏ |
| 165317 ஏ | 165317 பி |
| 165317 சி | 165317 டி |
| 165424 ஏ | 167219 ஏ |
| 167219 பி | 167287 ஏ |
| | 167427 ஏ |
| 167795 ஏ | 167795 ஈ |
| 167795 பி | 167795 சி |
| 167795 டி | 167795 ஈ |
| 167795 எவ் | 167933 ஏ |
| 167933 பி | 168020 ஏ |
| 168030 ஏ | 168037 ஏ |
| 168037 பி | 168037 பி |
| 168037 சி | 168037 டி |
| 169616 ஏ | 169529 ஏ |
| 169632 ஏ | 169632 பி |
| 169632 சி | 169708 ஏ |
| 169737 ஏ | 169737 பி |
| 169737 சி | 169737 டி |
| 169737 ஈ | 169737 எவ் |
| 169745 ஏ | 169808 பி |
| 169808 சி | 169855 ஏ |
| 169867 ஏ | 169867 பி |
| 169870 ஏ | 169870 பி |
| 169870 சி | 169870 டி |
| 169901 ஏ | 169901 பி |
| 169901 சி | 169901 டி |
| 172142 ஏ | 172210 ஏ |
| 172245 ஏ | 172311 ஏ |
| 176045 பி | 172484 ஏ |
| 176052 ஏ | 176127 ஏ |
| 176136 ஏ | 176158 ஏ |
| 176158 பி | 176180 ஏ |
| 176190 ஏ | 176200 ஏ |
| 176200 பி | 176200 சி |
| 176200 டி | 176200 ஈ |
| 176200 எவ் | 176239 ஏ |
| 176308 ஏ | 176308 பி |
| 176308 சி | 177518 ஏ |
| 177695 ஏ | 177695 பி |
| 177679 ஏ | 177679 பி |
| 177976 ஏ | 177979 பி |
| 177979 ஏ | 177979 பி |
| 177979 சி | 178008 ஏ |
| 178008 பி | 180399 ஈ |
| 180399 பி | 180400 ஏ |

### மருதங்கேணி

| | |
|---|---|
| 176303 ஏ | 176303 பி |
| 176303 சி | |

### நல்லூர்

| | |
|---|---|
| 174750 ஏ | 174750 பி |
| 174750 சி | 176008 ஏ |
| 176003 பி | 176008 சி |
| 176778 டி | 176778 ஏ |
| 176778 பி | 178759 ஏ |
| 178759 பி | 178811 ஏ |
| 178815 ஏ | 178815 பி |
| 178881 ஏ | 178881 பி |
| 178881 சி | 178888 ஏ |
| 178888 பி | 178888 சி |
| 178888 டி | 178888 ஈ |
| 178888 எவ் | 17888 ஏ/சி |
| 178991 ஏ | 178901 பி |
| 179071 ஏ | 179071 பி |
| 179219 ஏ | 179829 ஏ |

### கரவெட்டி

| | |
|---|---|
| 172405 ஏ | 172405 பி |
| 172405 சி | |
| 172617 ஏ | 174319 ஏ |
| 174385 ஏ | 174390 ஏ |
| 174440 ஏ | 174452 ஏ |
| 174452 பி | 174452 ஏ |
| 174522 ஏ | 174522 பி |
| 174547 ஏ | 174547 பி |
| 174547 சி | 174550 ஏ |
| 174550 பி | 174559 ஏ |
| 174559 பி | 174578 ஏ |
| 174609 ஏ | 174639 ஏ |
| 174650 ஏ | 174650 பி |
| 174650 சி | 174650 டி |
| 174652 ஏ | 174652 பி |
| 174655 ஏ | 174655 பி |
| 174655 சி | 174655 டி |
| 174664 ஏ | 174678 ஏ |
| 174678 பி | 174681 ஏ |
| 174681 பி | 174684 ஏ |
| 174684 பி | 174685 ஏ |
| 174685 பி | 174689 ஏ |
| 174698 ஏ | 174698 பி |
| 174713 ஏ | 174713 பி |
| 174713 சி | 174713 டி |
| 174713 ஈ | 176020 ஏ |
| 176020 பி | 176020 சி |
| 176020 டி | 176027 ஏ |
| 176038 பி | 176043 ஏ |
| 176045 ஏ | |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 178530 ஏ | 178530 பி |
| 178572 ஏ | 178660 ஏ |
| 178681 ஏ | 178696 ஏ |
| 178696 பி | 178713 ஏ |
| 178849 ஏ | 179026 ஏ |
| 179056 ஏ | 179076 ஏ |
| 179076 பி | 179076 சி |
| 179084 ஏ | 179161 ஏ |
| 179162 ஏ | 179234 ஏ |
| 179234 பி | |

### பருத்தித்துறை

| | |
|---|---|
| 132591 ஏ | 132591 பி |
| 140262 ஏ | 140262 பி |
| 140262 சி | |
| 140320 ஏ | 151248 ஏ |
| 151248 பி | 151248 சி |
| 151248 டி | 151248 ஈ |
| 151248 எவ் | 151369 ஏ |
| 151369 பி | 151369 சி |
| 151369 டி | 153796 ஏ |
| 154721 ஏ | 154721 பி |
| 157994 ஏ | 157994 பி |
| 157994 சி | 157995 ஏ |
| 157995 பி | 158021 ஏ |
| 158021 பி | 158021 சி |
| 158318 ஏ | 158403 ஏ |
| 158403 ஏ | 160290 ஏ |
| 160290 பி | 160306 ஏ |
| 160306 பி | 160307 ஏ |
| 160307 பி | 160329 ஏ |
| 160329 பி | 160377 ஏ |
| 160377 | 162052 ஏ |
| 162052 பி | 162052 சி |
| 162052 டி | 162449 ஏ |
| 167142 ஏ | 167142 பி |
| 167278 ஏ | 167278 பி |
| 167306 ஏ | 167306 பி |
| 176837 ஏ | 167837 பி |
| 167988 ஏ | 168150 ஏ |
| 168152 ஏ | 168152 பி |
| 168177 ஏ | 169545 ஏ |
| 69712 ஏ | 169754 ஏ |
| 172141 ஏ | 172142 பி |
| 172161 ஏ | 172161 பி |
| 172161 சி | 172218 ஏ |
| 172394 ஏ | 172394 பி |
| 172394 சி | 172456 ஏ |
| 172535 ஏ | 172535 பி |
| 172536 சி | 174294 ஏ |
| 174546 ஏ | 174546 பி |
| 174577 ஏ | 174577 பி |
| 174620 ஏ | 174623 ஏ |
| 174623 பி | 174624 ஏ |
| 174624 பி | 174633 ஏ |
| 174665 ஏ | 174665 பி |
| 174665 சி | 174682 ஏ |
| 174682 பி | 176019 ஏ |

### பருத்தித்துறை

| | |
|---|---|
| 176026 ஏ | 176026 பி |
| 176026 சி | 176032 ஏ |
| 176032 பி | 176038 ஏ |
| 176046 ஏ | 176046 பி |
| 176046 சி | 176046 டி |
| 176047 ஏ | 176048 ஏ |
| 176048 பி | 176057 ஏ |
| 176057 பி | 176057 சி |
| 176109 ஏ | 176109 பி |
| 176109 சி | 176109 டி |
| 176109 ஈ | 176163 ஏ |
| 176199 ஏ | 176199 பி |
| 176199 சி | 176199 டி |
| 176204 ஏ | 176204 பி |
| 176222 ஏ | 176226 பி |
| 176227 ஏ | 176290 ஏ |
| 176290 பி | 176290 சி |
| 176472 ஏ | 176472 பி |
| 176484 ஏ | 176484 பி |
| 176484 சி | 176484 டி |
| 176484 ஈ | 176484 எவ் |
| 176484 ஜி | 177561 ஏ |
| 177561 பி | 180410 ஏ |
| 180418 ஏ | 180431 ஏ |
| 180431 பி | 180431 சி |
| 180431 டி | 180464 ஏ |
| 180596 ஏ | |

### சங்கானை

| | |
|---|---|
| 176802 ஏ | 176802 பி |
| 178604 ஏ | 178615 ஏ |
| 178788 ஏ | 178788 பி |
| 179132 ஏ | 179356 ஏ |
| 179356 பி | |

### சாவகச்சேரி

| | |
|---|---|
| 155914 ஏ | 155914 பி |
| 155914 சி | 165003 ஏ |
| 165003 பி | 165415 ஏ |
| 165415 பி | 165415 சி |
| 169763 ஏ | 169763 பி |
| 169883 ஏ | 169883 பி |
| 174579 ஏ | 174579 பி |
| 180417 ஏ | 180417 பி |
| 180417 சி | |

### தெல்லிப்பளை

| | |
|---|---|
| 160694 ஏ | 176739 ஏ |
| 176739 பி | 176797 ஏ |
| 178801 ஏ | 178801 பி |
| 178880 ஏ | 179016 ஏ |
| 179025 ஏ | 179032 ஏ |
| 179032 பி | 179054 ஏ |
| 179267 ஏ | 179267 பி |
| 179267 சி | |

### உடுவில்

| | |
|---|---|
| 169020 ஏ | 178748 ஏ |
| 178749 ஏ | 178750 ஏ |
| 178761 ஏ | 178761 பி |
| 178852 ஏ | 078852 பி |
| 178870 ஏ | 178883 ஏ |
| 179029 ஏ | 179029 பி |
| 179159 ஏ | 179159 பி |
| 179276 ஏ | |

## விளையாட்டு போட்டி

(யாழ்ப்பாணம்)

யா/உடுப்பிட்டி... யா/உதம்பிராய் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி, இன்று பி.ப. 2 மணியளவில் அதிபர் அ. ஈஸ்வரநாதன் தலைமையில் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத் தலைவர் லயன் அ. நல்லதம்பி, கோப்பாய்க் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் இ. சிவஞானசுந்தரம். உருபபிராய் இந்துக் கல்லூரி இளைப்பாறிய ஆசிரியர் மு வாமதேவன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

விசேட நிகழ்வாக பிராந்தியம் - 9 அரிமாக் கழகத் தலைவர் இ. நடராசாவினால் கல்லூரி மைதானவீதியை திறந்து வைக்கும் வைபவம் இடம் பெறும். (உ)


வட பிராந்திய போக்குவரத்துச் சபை

## பாவித்த ரயர்கள், ரியூப்கள், பிளாப்கள் ஆகியவற்றின் விற்பனைக்கான கூறுவிலை கோரல்

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பேருந்துகளிலிருந்து பாவித்த ஒரு தொகுதி ரயர்கள், ரியூப்கள், பிளாப்கள் விற்பனைக்குண்டு. இவற்றைக் கொள்வனவு செய்ய விரும்புவோர் பலாலி வீதியில் அமைந்துள்ள கோண்டாவில் சாலையில் வேலை நாட்களில் காலை 9-30 மணியிலிருந்து மாலை 3 00 மணி வரை பார்வையிடலாம். பின்வரும் முறைப்படி தங்களது கேள்விகளை தயாரித்து 12-02-2001 ஆம் திகதி மாலை 3 00 மணிக்கு முன்பதாக தலைவர், கூறுவிலைச் சபை, வ. பி. போ. சபை பலாலி வீதி, கோண்டாவில் என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்க வேண்டும். தெரிவு செய்யப்பட்டவர்கள் முழுப் பெறுமதியின் 25 வீதப் பணத்தை உடன் செலுத்துவதுடன், ஏழு நாட்களில் முழுப் பணத்தையும் செலுத்தி சகலத்தையும் முழுமையாக சாலைக்கு வெளியே கொண்டு செல்லுதல் வேண்டும்.

**விண்ணப்பம் பின்வரும் முறையில் தயார் செய்யப்படவேண்டும்-**

1. பாவித்த ஒரு ரயரின் எனது கூறுவிலை ரூபா.........
2. பாவித்த 25 எண்ணிக்கை கொண்ட ரியூப்கள் ஒரு குவியலின் எனது கூறுவிலை ரூபா ...............
3. பாவித்த குவியல் பிளாப்பன் எனது கூறுவிலை ரூபா ...................

விண்ணப்பங்கள் யாவும் 12-02-2001 அன்று மாலை 3.00 மணிக்கு பொது முகாமையாளரால் நியமிக்கப்பட்ட தேர்வுக் குழு, விண்ணப்பித்தோர் முன்னிலையில் திறக்கப்பட்டு கொள்வனவு கொள்பவர் தேர்ந்து எடுக்கப்படுவார். 'தலைவர், கூறுவிலைச் சபையின் முடிவே இறுதியானதாகும்.

**பொதுமுகாமையாளர்**
வட பிராந்திய போக்குவரத்துச் சபை
கோண்டாவில்.

திகதி 30-01-2001

(கி-1939)



## அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

பௌதீக விஞ்ஞான கற்கை நெறி
2000-2001

(வெற்றிடம் நிரப்பு பட்டியல்-02)

மேற்படி கற்கைநெறிக்கு வெற்றிடம் நிரப்பு பட்டியல் 02 இல் தெரிவானோர் விபரம் யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி காரியாலய விளம்பரப் பலகையில் இடப்பட்டுள்ளது.

தெரிவான மாணவர்கள் தங்கள் பதிவினை 10 02-2001 க்கு முன்னர் மேற்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றார்கள்.

**பதிவாளர்.**

(கி/1938)



## 31ம் நாள் நினைவஞ்சலி



### திருமதி
### சிதம்பரநாதன் திலகவதி

குறள்
பொதுநலத்தார் புன்நலம் தோயார் மதிநலத்தின்
மாண்ட அறிவினவர்

| குவலயத்தில் | சுகமயத்தில் |
|---|---|
| 31-08-1938 | 01-01-2001 |

பாசம் சுமந்தீர்கள் பண்பு சுமந்தீர்கள்
எமக்காக வாழ்ந்து ஏக்கம் சுமந்த தெய்வமே
கண்விழித்தீர்கள் கண்ணீர் வடித்தீர்கள் எமக்காக
பாசம் சொரிந்த உடலாய் நேசத்தோடு நின்றீர்கள்
நெஞ்சினில் நினைத்ததை சணீர்என ஒலித்தீர்கள்
தனிமரமாய் நின்றீர்கள் சாதனைகள் பல
படைத்தீர்கள்

தனித்தவழியில் காலன் கவர்ந்துவிட்டான் - அம்மா
ஆழாத்துயரில் ஆழ்த்திவிட்ட தெய்வமே
நினைக்கமுன் நிறைந்து விட்டீரே
நினைக்க நினைக்க நெஞ்சம் குமுறுதம்மா
அவ்வுலகில் சாந்திபெற இவ்வுலகில் வாடுகிறோம்
அன்புத்தாயே

31-01-2001 புதன்கிழமை நடைபெறும் அந்தியேட்டிக்கிரியையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்
**கணவன், பிள்ளைகள்**
**சகோதர சகோதரிகள்**
**உறவினர்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

கருவலடி ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(2474)

# செய்தித் துளிகள்

## போராட்டம் தொடரும்

(கொழும்பு)

கல்முனை தமிழ் உப பிரதேச செயலகம் தரம் உயர்த்தப்படும் வரை உண்ணாவிரதப் போராட்டம் தொடரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 24 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இப் போராட்டத்திற்கு மக்களின் ஆதரவு பெருகி வருவதுடன் இதற்கு ஈ.பி ஆர். எல். எவ் இனரும் ரெலோ அமைப்பினரும் ஆதரவு தெரிவித்ததாக தெரிய வருகிறது. (உ-9)

## பரிசளிப்பும் பெற்றோர் தினமும்

(அரியாலை)

வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் நாவற்குழி மகா வித்தியாலயம் ஆகியவற்றின் பெற்றோர் தினமும் பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு ப 9 30 மணிக்கு உரும்பிராய் இந்துக் கல்லூரி மண்டபத்தில் அதிபர் ஆ. சி. நடராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக விவசாய பீடாதிபதி சு. இராசதுரை, சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ. கணேசன், உடுவில் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் சு. தற்பரானந்தன் ஆகியோர் கலந்து கொள்வர்.

சிறப்பு நிகழ்வாக 'வயவன்' இரண்டாவது மலர் வெளியீடு இடம் பெறும். வெளியீட்டுரையை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி. வி. கிருஷ்ணசாமி நிகழ்த்துவார். (உ-106)

## பட்டம் வழங்கல்

[சுண்டிக்குளி]

திருமறைக் கலாமன்றத்தின் மறைக் கல்விநடு நிலைய மண்டபத்தில் அண்மையில் குருநகரைச் சேர்ந்த ஜி.பிரேமினஸ்இற்கு 'அரங்க வானிதி' பட்டமும் நவாந்துறையைச்சேர்ந்த என் எஸ். ஜெயசிங்கத்திற்கு 'கலைக்குரல்' பட்டமும் அளிக்கப்பட்டது. யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் சிவலிங்கராஜாவினால் பொன்னாடையும் போர்த்து கௌரவிக்கப்பட்டனர். (உ-110)

## ஒத்திவைப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, கல்முனை, திருகோணமலை, வவுனியா மாவட்ட வைத்தியசாலை வைத்தியர்கள் மேற்கொள்ள இருந்த அடையாள வேலை நிறுத்தம் கடைசி நேரத்தில் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

தமது கோரிக்கைகள் தொடர்பாக இன்று வரை காலக்கெடு விதித்துள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். (உ-5)

## இடமாற்றம்

(கல்வியங்காடு)

இவ்வருடத்திற்கான குடும்ப பதிவுப் பத்திரம் புதுப்பிக்கும் பணிகள் ஆரம்பமாகியுள்ளன.

இதுவரை காலமும் ஆரிய குளம் பாதுகாப்புப்டைப் பிரிவில் இப்பதிவினை மேற்கொண்டு வந்த ஜே/106 கிராமசேவகர் பிரிவிற்கு உட்பட்டவர்கள் இனிமேல் நல்லூர் கோவில் வீதியில் அமைந்திருக்கும் பாதுகாப்பு பிரிவில் தமது புதிய குடும்பப் பதிவுப்பத்திரங்களை புதுப்பிக்க முடியும் எனத் தெரிவிக்கப் படுகிறது. (செ-54)

## சமாதான நீதவான் நியமிப்பு

(ஈச்சமோட்டை)

அராலி வடக்கு அராலியைச் சேர்ந்த செல்லத்துரை பரமசிவம்பிள்ளை சமாதான நீதவானாக யாழ் நீதிமன்ற மஜிஸ்திரேட் விக்கினராசா முன்னிலையில் சத்தியப்பிரமாணம்செய்து கொண்டார்.

இவர் ஒரு பரம்பரை வைத்தியர் என்பதும் கைதடி அரசினர் வைத்தியசாலையின் வைத்திய அதிகாரியாக கடமையாற்றியவர்.

தற்போது வலிகாமம் மேற்கு பிரதேசசபை சுழிபுரம் வைத்தியப் பொறுப்பதிகாரியாகவும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை ஊழியர் நலன்புரி சங்க உபதலைவராகவும், இலங்கா சித்த ஆயுர்வேத வைத்தியக் கல்லூரியின் டி ஏ.எம் பட்டதாரிகள் சங்க தலைவராகவும், அராலி இந்துக்கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளராகவும், மானிப்பாய் கந்தசாமிகோவில் பரிபாலன சபையின் கணக்குப் பரிசோதகராகவும் கடமையாற்றுவதோடு பல்வேறு சமூகப்பணிகளிலும் பங்காற்றி வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-59)

## இன்று கூட்டம்

[ஈச்சமோட்டை]

யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவிலுள்ள முன்பள்ளி ஆசிரியர்களுக்கான முக்கிய கூட்டமொன்று இன்று பி. ப. 3 30 மணிக்கு சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி எஸ். சந்திரா தேவி தலைமையில் நடைபெறவுள்ளது

சோமசுந்தரம் வீதியில் அமைந்துள்ள முன்பள்ளி நிலையத்தில் நடைபெறும் இக் கூட்டத்தில் யாழ் செயலர் பிரிவுக்குட்பட்ட முன்பள்ளி ஆசிரியர்கள் அனைவரையும் தவறாதுசமுகமளிக்குமாறு முன்பள்ளி ஆசிரிய சங்கத் தலைவி கேட்டுள்ளார். (உ-59)

## விளையாட்டு அரங்கு திறப்பு

(கரணவாய்)

சமரபாகு நியூட்டன் சனசமூக நிலையத்தால் தமது கழகத்திற்கெனப் புதிதாக அமைக்கப்பட்டுள்ள விளையாட்டரங்கு எதிர்வரும் 7ஆம் திகதி தைப்பூசத் தினத்தன்று யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சண்முகநாதனால் திறந்து வைக்கப்படவுள்ளது.

அன்றைய தினம் உதைப்பந்தாட்டக் காட்சிப்போட்டிகளாக வதிரி டயமன்ட்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கலட்டி ஐக்கிய விளையாட்டுக் கழகமும், வல்வெட்டி கருணாகரன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (உ-27)

## இருவர் காயம்

(கொழும்பு)

அண்மையில்நாகர் கோவில் பகுதியில் படையினர் தரப்பில் ஒருவர் காயமடைந்திருப்பதாகவும்,

விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டிருப்பதாகவும் ஊடகத் தகவல் மையம் அறிவித்துள்ளது.

அத்துடன், அரியாலைப் பகுதியில் மிதிவெடிகள் செயலிழக்கச் செய்யும் பணியில் ஈடுபட்டிருந்த வேளை படைவீரர் ஒருவர் காயமடைந்திருப்பதாகவும் அறிவித்துள்ளனர். (உ)

# யாழ். பல்கலைக்கு கூடுதலான மாணவர்கள் உள்வாங்கப்படுவர்

## ஜனாதிபதி கொள்கையளவில் இணக்கம்

(கொழும்பு)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு இனி வரும் காலங்களில் கூடுதலான மாணவர்களை உள்வாங்க நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி கொள்கையளவில் இணக்கம் தெரிவித்துள்ளார்.

கடந்த 2000 ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய யாழ். மாவட்டப் பிரதிநிதிகள் சிலர், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை அவரது யாழ். மாவட்ட அலுவலகத்தில் சந்தித்து,

தாம் கல்வியைத் தொடர்வதிலும், பரீட்சையை எழுதுவதிலும் அனுபவித்த இன்னல்கள் குறித்து விபரமாக விளக்கி, பல்கலை அனுமதியில் இதுவிடயங்களைக் கருத்தில் எடுத்து கூடுதலான மாணவர்களை அனுமதிக்க வேண்டும் என கோரிக்கை விடுத்திருந்தனர்.

மாணவர்களின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட அமைச்சர் கடந்த வாரம் தலைநகர் கொழும்பில் ஜனாதிபதி சந்திரிகாவைச் சந்தித்து மாணவர்களின் மேற்படி பிரச்சினைகள் குறித்தும் கோரிக்கைகள் குறித்தும் விபரமாக எடுத்துக்கூறியதன் பேரில் ஜனாதிபதி இவ் இணக்கப்பாட்டை அளித்திருப்பதாய் தெரியவந்துள்ளது.

இதேசமயம், இது தொடர்பான உறுதியான பதிலுடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வெகுவிரைவில் சம்பந்தப்பட்ட மாணவர்களைச் சந்திப்பார் என மாணவர்கள் மத்தியில் நம்பிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## இராசி பலன்

31-01-2001
(தை 18, புதன்)
சப்தமி பி இ 3 26 வரை
அச்சுவினி வை 5.28 வரை
ராகுகாலம் 12 06- 2 06
நல்லநேரம் 5.06- 6 36

**மேடம்**
ஜனவசியம், சயனசுகம், போசன சுகம், தெளிந்த சிந்தை.

**இடபம்**
தனவிரயம், பிரயாணம், பிதா சிந்தை, காரிய தாமதம்.

**மிதுனம்**
காரிய ஜெயம், கீர்த்தி, சந்தோசமான செய்தி, தனலாபம்.

**கடகம்**
தொழில் சிறப்பு, முயற்சி கைகூடும், அதிகாரமான நிலை, மனஸ்தாபம்.

**சிங்கம்**
கட்டுப்பாடு, வயிற்றுக் கோளாறு, பிரயாணம், பதட்டமடைதல்.

**கன்னி**
காரியத் தடங்கல், எதிர்பாராத பிரச்சினை, நோய் ஏற்படல், பிரயாண பயம்.

**துலாம்**
கௌரவம், விருந்துபசாரம், தனவரவு, பிரயாண வசதி.

**விருச்சிகம்**
புதிய முயற்சி, வியாதி குறைதல், காரிய நன்மை, பகைவர் விலகுவர்.

**தனுசு**
தாழ்வு நிலை, மனக் கவலை, வியாதி, காரிய தாமதம்.

**மகரம்**
தன்னம்பிக்கைக் குறைவு, தடுமாற்றம், தலையிடி, முயற்சி தாமதம்.

**கும்பம்**
முயற்சி பலிதம், சகோதரர் உதவி, இனிய சம்பவம், அன்னியர் சந்திப்பு.

**மீனம்**
வாக்குக் கலகம், தனவிரயம், கௌரவக்குறை, காரிய தாமதம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

வளம்குறைந்த எமது பாடசாலைக்கு ரூபா 200000/- நிதி ஒதுக்கிக் கட்டடம் அமைக்க உதவிய ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் வடகிழக்குப் புனர்வாழ்வு அமைச்சருமான

**கௌரவ K. N. டக்ளஸ் தேவானந்தா அவர்களையும்**

யாழ். நாடாளுமன்ற உறுப்பினர்

**திரு V. K. குகேந்திரன் அவர்களையும்**

வலி வடக்குப் பிரதேச பொறுப்பாளர் அவர்களையும் பாராட்டி எமது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா / மல்லாகம்
கனிஷ்ட வித்தியாலயம்

(2473)



## நல்லூர் பிரதேச சபை திருநெல்வேலி

## அறிவித்தல்

### 1. திருநெல்வேலி இந்து மயான அபிவிருத்திச் சபைத் தெரிவும் ஒழுங்கு விதிகளும்

24-01-2001ஆம் திகதி பிரதேச சபை கேட்போர் கூடத்தில் எனது தலைமையில் நடைபெற்ற திருநெல்வேலி இந்து மயான அபிவிருத்திச் சபைக் கூட்டத்தில் கீழ் வரும் ஒழுங்கு விதிகளை திருநெல்வேலி இந்து மயானத்தை பயன்படுத்துவோர் பின்பற்ற வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

1. மயான பராமரிப்புக்கு சடலம் ஒன்றுக்கு ரூபா 50/- செலுத்த வேண்டும். இத்தொகை இந்து மயான அபிவிருத்திச் சபை பொருளாளர் திரு ச. ஸ்ரீகாந்தா (கம்பன் ச. ச. நிலையம்) இடம் செலுத்த வேண்டும்.
2. மயானத்தில் விறகு அடுக்கி, சடலம் எரித்து அவ்விடத்தை துப்பரவு செய்வதற்கு கட்டணமாக ரூபா 400/- செலுத்தப்பட வேண்டும்.
3. சடலம் எரிப்பவரின் சேவையினை பெறவிரும்பாதவர்கள் பராமரிப்புக் கட்டணம் ரூபா 50,- உடன் மேலதிகமாக ரூபா 100/- செலுத்தப்பட வேண்டும். சடலம் எரிக்கப்பட்டு இடம் துப்பரவு செய்த பின்னர் மேலதிகமாக அறவிடப்பட்ட கட்டணம் ரூபா 100/- மீளத் திருப்பி வழங்கப்படும்.

இவை தொடர்பான மேலதிக விபரங்களுக்கு நல்லூர் பிரதேச சபையுடனோ அல்லது இந்து மயான அபிவிருத்திச் சபை செயலாளர் திரு. த. சி. சிவநேசன் (கலா மன்ற ச. ச. நிலையம்) என்பவரிடம் தொடர்பு கொள்ளவும்.

### 2. நல்லூர் பிரதேச சபை மலர் வெளியீடு

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பிரதேச வரலாறு மற்றும் அரச பொது நிறுவனங்கள், சமூகசமயப்பெரியார்கள், சமூகசேவை நிறுவனங்கள், கோவில்கள், வீதிகள், குளங்கள் போன்றவற்றை உள்ளடக்கிய மலர் வெளியிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதனால் இது சம்பந்தமான விபரங்கள், ஆக்கங்கள், ஆலோசனைகள் என்பவற்றினை 28-02-2001 ஆம் திகதிக்கு முன்பதாக எமக்கு அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். இம்மலர் வெளியீடானது அனைத்து அரச பொது நிறுவனங்களின் அனுசரணையுடன் வெளியிடப்படவுள்ளது.

### 3. வீதிகளுக்கு பெயர் சூட்டல்

பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பிரதேச சபையால் பராமரிக்கப்படும் வீதிகளுக்கு பெயர்ப்பலகைகள் இடப்படவுள்ளது. உங்கள் பகுதியில் உள்ள சமூக சமயப் பெரியார்களை கௌரவிக்கும் முகமாக அவர்களின் பெயர்கள் சூட்டப்படவுள்ளதால் அவர்கள் தொடர்பான விபரங்களை 28-02-2001 ஆம் திகதிக்கு முன்பதாக எமக்கு அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

க. மணிபல்லவராஜன்
(ஜே.பி.யூ எம்)
தலைவர்,
நல்லூர் பிரதேச சபை.

நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி,
26-01-2001.

(கி-1937)

# தரம் 5 புலமைப் பரிசில் பயிற்சி வினாத்தாள்

## வினா இல - 02

### ஆக்கம் : தி. மயூரன்

★ **பின்வரும் சொற்களுக்கு எதிர்க் கருத்துள்ள சொல்லை எழுதுக.**
1) அருகாமை
2) அழகு
3) மென்மை
4) தண்
5) அமைதி

★ **பின்வரும் சொல்/ எண் வரிசையில் ஒன்று மட்டும் வேறுபட்டுக் காணப்படும் அதன் கீழ்க்கீறிடுக**
6) மானிப்பாய், கோப்பாய், சாவகச்சேரி, சண்டிலிப்பாய்
7) தீபன், நிரஞ்சனா, காந், றாயு
8) 11, 2, 9, 27
9) றோஜா, மல்லிகை, வேம்பு, அல்லி
10) மேகம், முகில், மஞ்சு, கடல்

★ **பின்வரும் பொருட்களை அளக்கப் பயன்படுத்தும் அலகினை/அலகுகளை தருக**
11) எண்ணெய் — — — — —
12) நூலின் நீளம் — — —
13) உப்பு — — — —
14) துணி — — — —
15) கீழ் தரப்பட்ட பொருட் களுள் எது விரைவாக வெப்பத்தைப் பெறும்?
மரச்சட்டம், பிளாத்திக் சட்டம், இரும்புச்சட்டம்

★ **கீழ் தரப்பட்டுள்ள தகவலை வாசித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக**
இலங்கை நாட்டைச் சேர்ந்த டாலி என்பவர் ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தில் ஆங்கில விரிவுரையாளராகப் பணியாற்றுகிறார். அவருக்கு அங்கு 1000 பவுண்ஸ் ஊதியமாக வழங்கப் படுகிறது.
16) டாலியின் சொந்த நாடு எது? — — — — — — — —
17) அவர் பணியாற்றும் பல்கலைக்கழகம் எந்த நாட்டில் உள்ளது? — — — — — — — — — —
18) 1பவுண் 100 இலங்கைரூபாவிற்கு சமனாயின் அவருக்கு கிடைக்கும் ஊதியத்தை இலங்கை ரூபாவில் தருக — — — — — — — —

★ **பின்வரும் சொற்களுக்கான ஆங்கிலப் பதத்தினை தருக**
19) ஆகாய விமானம் — — — — — —
20) பல்கலைக்கழகம் — — — — — — — — —

★ **பின்வரும் எண் தொடரை வைத்து அதன் கீழ் உள்ள வினாக்களிற்கு விடை தருக-**
1, 2, 4, 3, 7, 6, 10, 9, 11
21) ஒற்றை எண்கள் எவை? — — — — — — — — — —
22) முதன்மை எண்கள் எவை? — — — — — — — — — —
23) சதுர எண்கள் எவை? — — — — — — — — — —
24) ராஜன் என்பவர் ஒரு தொலைக் காட்சிப் பெட்டியை ரூபா 32,000 இற்கு கொள்வனவு. செய்து ரூபா 29,000 இற்கு விற்பனை செய்தார். அவர் அடைந்த நட்டம் என்ன? — — — — — — — — — —
25) சமாதானத்தை குறிக்கும் இலையின் பெயர் என்ன? — — — — — — — — — —

★ **"நான் கண்ட விபத்து" என்பது பற்றி 5 வசனங்கள் எழுதுக? ஒரு வசனத்தில் குறைந்தது 4 சொற்களேனும் இருத்தல் அவசியம்.**
— — — — — — — — — — — — —
— — — — — — — — — — — — —
— — — — — — — — — — — — —
— — — — — — — — — — — — —
— — — — — — — — — — — — —

**குறிப்பு:-**
விடைகளை வேறு தாளில் எழுதி அனுப்பவும்.
இதற்கான விடைகளை 07-02-2001 இற்கு முன் எமக்கு கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கவும்

**கல்விப் பகுதி**
**வினா இல: 02**
"வலம்புரி"
இல: 15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

மாணவர் முழுப்பெயர்: ......................................
சொந்த முகவரி: ......................................
கற்கும் பாடசாலை : ......................................
மாணவர் கையொப்பம் ; ......................................

இப்படிவத்தை வெட்டி உங்கள் விடைத்தாளுடன் தவறாது இணைத்து அனுப்பிவைக்கவும்

புலமைப் பரீட்சை
## வினா இல-01
### விடைகள்
01) மதி
02) உதிரம்
03) தீ
04) மகிழ்ச்சி
05) முகில்
06) மகள்
07) மான்
08) மேகம்
09) கோபம்
10) பேனா
11) DARLY
12) மேரி
13) M
14) வானத்தில் கருமேகங்கள் காணப்படும்
15) கிழக்கு
16) ஓவியங்கள்
17) தாஜ்மகால்
18) 2000 ம் ஆண்டு
19) கே ஆர். நாராயணன்
20) அடைமழை
21) உடைமைகளை
22) தாழ்வாரம்
23) 8 மணித்தியாலம் 50 நிமிடங்கள்
24) 12.m
25) 1k m;

## புலமைப் பரீட்சை வினா இல.01

அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயர் விபரம்.

01) இ. சரண்யா, கரவெட்டி ஞானாசாரியார் கல்லூரி.
02) ப. தாமரா, யாழ். இந்து ஆரம்பபாடசாலை.
03) சி. பிரணவன், மானிப்பாய் மெமோறியல் பாடசாலை.
04) அ. கடோற்கஜன், யாழ். இந்து ஆரம்ப பாடசாலை.
05) பு. ராஜாராம், துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்.
06) வி. மிதிலா, துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்.
07) நா. மாதங்கி, நெல்லியடி மெதடிஸ் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை.
08) ம. கஸ்தூரி, மானிப்பாய் சோதிவேம்படி.
09) சி. லகீசன், ஆனைக்கோட்டை சென்சாவ்ஸ்.
10) யோ. நிராஷ், வட்டு. திருநாவுக்கரசு வித்தியாலயம்.
11) த. நிறோஜிதா, சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை.
12) ஆ. யோகினி, நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி.

## வேலைகள் பூர்த்தி

(இணுவில்)

புன்னாலைக்கட்டுவன் அரசினர் தமிழ்க் கலவன்பாடசாலையில் ஆரம்பக்கல்வி செயற்பாட்டறை மற்றும் புதிய அதிபர் அலுவலகம் திறந்த வெளிஅரங்கு என்பன அமைக்கப்பட்டு அவற்றின் வேலைகள் பூர்த்தி அடைந்துள்ளன (உ-49)

## முகமாலையில் மோதல்

(யாழ்ப்பாணம்)

இம்மாதம் 28 ஆம் திகதி முகமாலைப் பகுதியில்ரோந்து சென்ற படையினர், எதிர்ப்பட்ட விடுதலைப் புலிகளைத் தாக்கியபோது குறைந்தது 2 விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினராவது கொல்லப்பட்டிருக்கலாம் என ஊடகத் தகவல் மையம் அறிவித்துள்ளது.

அத்துடன் புதிதாக கைப்பற்றப்பட்ட பகுதிகளில் 10 மிதிவெடிகளை இனம் கண்டு அவற்றினைச் செயலிழக்கச் செய்திருப்பதாகவும் அறிவிக்

## வறுமையின் கொடுமை குடும்பஸ்தர் தற்கொலை

(கொழும்பு)

தொழிலின்றி பொருளாதார சுமைகளில் சிக்கித் தவித்த இளம் குடும்பஸ்தர் அளவுக்கதிகமான மருந்து வில்லைகளை உட்கொண்டு உயிரை மாய்த்தார்.

பசறைப் பகுதியில் இடம் பெற்ற இப் பரிதாபச் சம்பவம் பற்றி தெரியவருவதாவது,

பதுளை பசறை வீதியில் அமைந்துள்ள சிங்கப்பூர், ஜேர்மன் மற்றும் உள்ளூர் முதலீட்டாளர்களின் ஆடைத் தொழிற்சாலையின் ஊழியரான எம். சொஹான் திடீரென தொழிற்சாலை மூடப்பட்டமையாலும், 3 மாதச் சம்பளம் வழங்கப் படாமையினாலும் பெரும் பொருளாதார நெருக்கடிகளை எதிர் கொண்டு வந்தார் எனவும்,

இவரது குழந்தையின் உணவுத் தேவையைக்கூட பூர்த்தி செய்ய முடியாத தனது நிலையை எண்ணி விரக்தியுற்ற நிலையிலேயே தற்கொலை முயற்சியில் ஈடுபட்டார் எனவும் தெரியவந்துள்ளது. (உ)

## புதைக்கப்பட்ட பெண்ணின் சடலம் தலைதுண்டித்தநிலையில்

(கொழும்பு)

மதவாச்சிப் பகுதியில் உள்ள மயானமொன்றில் பெண்ணொருவரின் சடலம் தோண்டி எடுக்கப்பட்டு தலை துண்டிக்கப் பட்டுள்ளது.

மதவாச்சி, சங்கிலி கனற்தராவையை சேர்ந்த வயோதிபப் பெண்ணொருவரின் சடலமே இவ்வாறு தோண்டி எடுக்கப் பட்டு தலைதுண்டிக்கப்பட்டதாய் தெரியவந்துள்ளது.

இறுதிக் கிரியைகளை நிறைவேற்றவென மயானப்பகுதிக்குச் சென்றவர்கள் தலை துண்டிக்கப்பட்ட நிலையிலான சடலத்தையும் வேறு பகுதியில் வீசப்பட்டிருந்த தலையையும் கண்டு பிடித்ததாக கூறப்படுகிறது.

இதேவேளை,

இத்தலை நாட்டு வைத்தியர்களினால் மந்திரம் சூனியம் போன்ற வேலைகளுக்குப் பயன்படுத்தப் பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. (உ)

## யாழ். மாவட்ட உயர்நீதிமன்ற அமர்வுகள் நேற்று முதல் ஆரம்பம்

கடந்த 15 வருட கால நீண்ட இடைவெளியின் பின்னர் யாழ்.மாவட்ட உயர் நீதிமன்ற அமர்வுகள் நேற்று செவ்வாய்க்கிழமை மு.ப.10 மணியளவில் யாழ் மாவட்ட மேல் நீதிமன்ற நீதிபதி கே. பி.எஸ்.வரதராசா தலைமையில் சம்பிரதாய பூர்வமாக குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இவ் ஆரம்ப நிகழ்வில் யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை, மல்லாகம், சாவகச்சேரி, பருத்தித்துறை நீதிமன்ற நீதிபதிகள் மேற்படி நீதிமன்றங்களின் பணியாளர்கள் மற்றும்சட்டத்தரணிள் யாழ் சிறைச்சாலை அத்தியட்சகர் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள், பொலிஸ் உயரதிகாரிகள், யாழ் மாவட்ட அரச அதிபர், மேலதிக அரசாங்க அதிபர், யாழ் பிரதேச செயலர், யாழ் மாவட்ட மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பதில் இணைப்பாளர், யாழ் முதல்வரும் சட்டத்தரணியுமானரவிராஜ் மாநகர முதல்வர்ஆகியோர் கலந்துகொண்டனர்.

சட்டமா அதிபரின் பிரதிநிதியாக அரச வழக்கறிஞர் கணேசராஜா மேல் நீதிமன்ற நீதிபதியை வரவேற்று உரையாற்றியதைத் தொடர்ந்து யாழ் மாவட்ட சட்டத்தரணிகள் சார்பில் சட்டத்தரணி சாந்தா அபிமன்னசிங்கம் வரவேற்புரை நிகழ்த்தினார்,

இதேசமயம், மேல்நீதிமன்ற அமர்வுகள்ஆரம்பமாவதை யொட்டி நேற்று முன்தினம் மாலைமுதல், பஸ்ரியன் சந்திதொடக்கம் பழைய பூங்கா கடற்கரை வீதிச் சந்திவரை பெருமளவு இராணுவத்தினரும், பொலிஸாரும் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமையை அவதானிக்க முந்தியது. (உ-12,59,77)

## நிவாரணம்

(கொழும்பு)

அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவினை சமாளிக்க அடுத்த மார்ச் மாதம் சமர்ப்பிக்கப்பட இருக்கும் வரவு செலவுத்திட்டத்தில் சில நிவாரணங்களை வழங்க இருப்பதாக ஜனாதிபதி தீர்மானித்துள்ளதாக தொழில் அமைச்சர் அலவிமௌலானா தெரிவித்துள்ளார். (உ-9)


## வீடியோ விவரணப் படத் தயாரிப்பு

பனை வளத்தின் பல்வேறு பயன்பாடுகளையும் விவரணப் படமாகத் தயாரித்து மக்கள் மத்தியில் விளம்பரப்படுத்துவதற்கு பல்வேறு துறை சார்ந்த நிபுணர்களுக்கும், வெளிநாட்டு வர்த்தக ஊடகங்களுக்கும் வழங்குவதற்குமான விவரணப் படத்தினை தயாரிப்பதற்கு பனை அபிவிருத்திச் சபை முனைந்துள்ளது.

இப் படம் 2.30 மணித்தியாலங்களுக்கு மேற்படாத வகையில் தயாரித்தல் வேண்டும். படப்பிடிப்பானது பனை வளத்துடன் நேரடியாகத் தொடர்புடைய மக்களின் அன்றாட வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்த உயிரோட்டமுள்ள குறும்பட அல்லது விவரணப் படத் தயாரிப்பில் அனுபவமுள்ளவர்கள் தமது தகைமைச் சான்றிதழ்களுடன் தொடர்பு கொள்ளவும்.

**தொடர்பு கொள்ள வேண்டிய இறுதி நாள் 5-2-2001**

தலைவர்,
**பனை அபிவிருத்திச் சபை**

விபரங்களுக்கு,
தலைமையகம்,
பனை அபிவிருத்திச் சபை,
53, கண்டி வீதி,
யாழ்ப்பாணம். (கி-1934)

## இன்று ஒரு தகவல்

# தானம் செய்யும்வழிமுறை

தர்ம புத்திரர் ராஜசூய யாகம் செய்தார். கிருஷ்ணனின் மேற்பார்வையில் அது மிகவும் கோலாசலமாக நடந்தது. கிருஷ்ணன் எல்லோருக்கும் ஆளுக்கு ஒரு வேலை கொடுத்தான். அதன்படி பீமனுக்கு உணவுக் கூடத்தில் அடியார்களை உபசரிக்க வேண்டிய வேலை.

பீமன் அடியார்களுக்கு தானே முன் நின்று பரிமாறினான். காய்கறிகள், பட்சணங்கள், பழங்கள், உணவு வகைகள் எல்லாவற்றையும் அவர்களுக்கு அள்ளி அள்ளிப் போட்டான். அதனால் முதலில் ருசித்துச் சாப்பிட்டவர்கள் பின்பு சாப்பிடத் திண்டாடினார்கள். ஆனால் பீமனோ உணவு வகைகளை அள்ளிக்கொட்டிக்கொண்டே இருந்தான். சாப்பிடும்படி அவர்களை வற்புறுத்தினான். பின்பு அவர்களைப்பலவாறாகத் திட்டினான். மேற்கொண்டு சாப்பிட மறுத்தவர்களைத் தன் கதாயுதத்தைக் காட்டிப் பயமுறுத்தினான்.

அதனால் அடியார்கள்சாப்பிட வருவதை நிறுத்தினார்கள். பீமன் கண்ணுக்குப் படாமல் ஓடி ஒளித்தார்கள். ஒருநாள் கண்ணன் பீமனிடம் அடியார்களைப் பற்றி விசாரித்தான். 'கிருஷ்ணா! என்ன காரணமோ தெரியவில்லை. இப்போதெல்லாம் இருபது முப்பது பேர்களே வருகின்றனர்' என்றான் பீமன். ஒரு கணம் யோசனையில் ஆழ்ந்த கண்ணன் பீமா! நான் போசனசாலையைக் கவனித்துக் கொள்கிறேன். நீ கந்தமாதன மலைக்குச் சென்று கந்தமாதன முனிவரைக் கண்டு வணங்கி விட்டுவா' என்றான். அதன்படியே பீமனும் சென்றான்.

கிருஷ்ணன் யாக சாலைக்குள் நுழைந்தான். அங்கே சாப்பிட அடியார்கள் யாரையும் காணவில்லை. உடனே அவன் அவர்களைத் தேடிப் போனான். என்ன இது! உங்கள் யாருக்கும் பசிக்க வில்லையா? ஏன் இன்னும் சாப்பிடவரவில்லை?' என்று கேட்டான். ஆனால் அவர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டு நின்றனரே 'விர, யாரும் பதில் சொல்லவில்லை. கடைசியில் ஒருவர் 'பீமன் உணவுப் பண்டங்களை முறம், முறமாகத்தள்ளுகிறான். அவற்றைச் சாப்பிட்டுத்தான் ஆக வேண்டுமென்று பயமுறுத்துகிறான். கன்னா பின்னா என்று திட்டுகிறான்.' என்று சொன்னார். கிருஷ்ணன் அவர்களைச் சமாதானப்படுத்திச் சாப்பிட அழைத்துச் சென்றான்.

இதற்கிடையில் பீமன் கந்தமாதன மலையை அடைந்தான். அங்கே பொன்மேனியோடு விளங்கிய கந்தமாதன முனிவர் ஜபம் செய்துகொண்டிருந்தார். பீமன் அவரை வணங்கினான். 'பீமா! இப்படிச் சற்று அருகில் வா' என்றார் முனிவர். ஆனால் அவர் வாயிலிருந்துவந்த துர்வாடை பீமனை நெருங்க விடாமல் அடித்தது.

அதைக் கண்ட முனிவர், பீமா உன் தயக்கத்திற்குக் காரணம் புரிகிறது. முற்பிறவியில் நான் அளவில்லாத தான, தருமங்கள் செய்தேன். அதன்பயனாகத்தான் எனக்கு இந்த ஜன்மத்தில் இந்த அழகான பொன்னிற மேனி அமைந்துள்ளது. ஆனால் வந்த யாசகர்களைக் கடுமையாகத் திட்டியும் தூஷித்தும் தானம் செய்ததனால் என் வாயில் துர்நாற்றம் வீசுகிறது.' என்றுவிசனத்தோடு சொன்னார்,

பீமனுக்கு வயிற்றில் புளியைக் கரைத்தது.' இந்த முனிவரைப் போலத்தானே நானும் கன்னா பின்னா என்று திட்டி உணவு கொடுத்தேன்? சாப்பிட வந்தவர்களை இன்னும் உண்ணும்படி கதையைக் காட்டிப்பயமுறுத்தினேனே; எனக்கு என்ன தண்டனை' கிடைக்குமோ? என்று கலங்கினான்.

அப்பொழுது முனிவர். 'பீமா கிருஷ்ணன் அனுப்பிய உன்னைக் கண்டதும் என் சாபம் நீங்கியது. என்வாயில் இது வரை இருந்து வந்த துர்நாற்றம் நீங்கி விட்டது' என்று சொன்னார். பீமன் ஊர் திரும்பிக் கண்ணன் காலில் விழுந்தான். 'எனக்குப் புத்தி வந்தது என்னை மன்னித்து விடு' என்று கதறினான்.

அன்னதானமோ, வேறு எந்தத் தானமோ செய்வது பெரிதல்ல. இனிமையாகப் பேசித் தானம் கொடுக்க வேண்டும். அது மிகவும் முக்கியம்' என்றான் கிருஷ்ணன்.

நன்றி

**தெய்வீகக் கதைகள்**

# அரசியல்தஞ்சம் கோருபவர்களில் இலங்கையர் இரண்டாமிடம்

## லண்டன் அறக்கொடை நிலையம் அறிவிப்பு

(கொழும்பு)

பிரிட்டனில் அரசியல்தஞ்சம் கோருவோரில் இலங்கையர் இரண்டாம் இடத்தினை வகிப்பதாக லண்டனில் இயங்கும் அறக்கொடை நிலையம் தெரிவித்துள்ளது.

பிரிட்டனில் அரசியல் புகலிடம் கோரி அங்கு தங்கியுள்ள வெளிநாட்டவர்கள் தொகை கடந்த வருடம் 75 ஆயிரமாக அதிகரித்துள்ளதாகவும் இவ்வாறு புகலிடம் கோருபவர்களில் பெருந்தொகையானோர் சொந்த நாடுகளில் சித்திரவதைகளுக்கு உள்ளானவர்கள் எனவும் மேற்படி நிறுவனம் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் ஒரு வருடத்தில் ஆகக்கூடுதலாக 3 ஆயிரத்து 306 பேரே தஞ்சம் கோரி லண்டன் வந்துள்ள போதிலும் கடந்த வருடம் துருக்கியில் இருந்து 697 பேரும், இலங்கையில் இருந்து 683 பேரும், ஈரானில்இருந்து 477 பேரும், ஈராக்கிலிருந்து 468 பேரும், கொசோவோவில் இருந்து 304 பேருமாக 4 ஆயிரத்து 957 பேர் அரசியல் தஞ்சம்கோரி பிரிட்டன் வந்து இறங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## சைக்கிள் அபகரிப்பு

(யாழ்ப்பாணம்)

துவிச்சக்கர வண்டியில் சென்றுகொண்டிருந்த சகோதரர்களை வழிமறித்து துவிச்சக்கர வண்டியை அபகரித்துக்கொண்டு அவர்களை விரட்டியனுப்பிய சம்பவம் ஒன்று அண்மையில் வட்டுக்கோட்டைப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

கடந்த வெள்ளியன்று மாலை 7 மணியளவில், கடைக்குச் சென்று பொருட்களை வாங்கிவிட்டுத் திரும்பிக்கொண்டிருந்த அண்ணன், தங்கையாகிய இருவரிடமே இவ்வாறு திருட்டு இடம் பெற்றதாக தெரியவந்துள்ளது. (உ)

## மஹாபாரதச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி கிழக்கு அருள்மிகு ஸ்ரீபூதநாதசுவாமி ஆலய வருடாந்த அலங்கார உற்சவத்தை முன்னிட்டு நேற்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் எதிர்வரும் 10ஆம் திகதி சனிக்கிழமை வரை மஹாபாரத ஆன்மீகச் சொற்பொழிவு நடைபெறுகின்றது.

இச் சொற்பொழிவினை தத்துவவித்தகர் திருஷிச்சரம் பிரம்ம ஸ்ரீ ஷர்மாஜி தினமும் மாலை 6.00 மணிக்குநிகழ்த்துவார். (செ - 54)

## பதவி உயர்வு

(கொழும்பு)

இராணுவ பொலிஸ் பகுதியில், பொலிஸ் பிரிவுசிரேஷ்ட அத்தியட்சகராகக் கடமையாற்றிய கீர்த்தி கயநாயக்கா பிரதிப் பொலிஸ்மா அதிபராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார். (உ)

## வெள்ளைப் பூச்சு

(கல்வியங்காடு)

யாழ். மாநகரசபைப் பகுதிக்கு உட்பட்ட இடங்களில் அமைக்கப்பட்டுள்ள பேருந்துத் தரிப்பிடங்களுக்கு வெள்ளைப் பூச்சு அடிக்கப் பட்டுள்ளது. (உ - 54)

## பகல்நேர திருட்டு

[அரியாலை]

ஈவினைப் பகுதியில் கடந்த சில வாரங்களாகபகல்நேரத் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

இதனால் வீடுகளில் தனியாக இருப்போர் பெரும் அச்சத்தை எதிர் நோக்கியுள்ளனர்'

கடந்த வாரம் இவ்வாறான திருட்டு ஒன்று இப்பகுதியிலுள்ள ஓய்வுபெற்ற அதிபர் செ. செல்வரத்தினம் என்பவரின் வீட்டில் இடம் பெற்றது.

மின்சார உபகரணங்கள் மற்றும் பெறுமதி வாய்ந்த பொருட்கள்பல கொள்ளையிடப் பட்டதாக அறிய வருகின்றது (உ-106)

# தப்பியோடிய படையினர் ஐவர் பொலிஸாரால்கைது

### மதுபோதையில் இருந்தனராம்

(கொழும்பு)

விடுமுறையில் வீடு வந்த படை வீரருடன், தமது பொழுதை உல்லாசமாகக் கழித்த, தப்பியோடிய 5 படையினர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கல்கமுவ பகுதியில் இடம் பெற்ற இச்சம்பவம்பற்றி தெரியவருவதாவது, விடுமுறையில் நின்ற படைவீரரை கண்ட முன்னை நாள் நண்பர்களான தப்பியோடிய படையினர் மது வருந்தி தமது சந்தோசத்தைப் பகிர்ந்து கொண்டனர்.

போதையில் இருந்த வேளை, பொலிஸார் அவ்விடத்தை சுற்றிவளைத்து அவர்களை கைதுசெய்தனர். (உ)

# படையினரைப் பாராட்டும் விழா ஒரு மாதம்

(கொழும்பு)

இலங்கையின் 53 வது சுதந்திர தினக் கொண்டாட்டங்களின் ஓரம்சமாக படையினரைப் பாராட்டும் விழா இடம்பெறவுள்ளது.

நேற்று ஆரம்பமான பாராட்டு விழா நிகழ்வுகள் வரும் மாதம் 28 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளன.

''துணிவுமிக்க இராணுவ வீரர்களுக்கு நாட்டு மக்களின் பாராட்டு'' என்ற தொனிப் பொருளில் மேற்படி நிகழ்வுகள் இடம்பெறவிருக்கின்றன.

இராணுவ வீரர்களுக்கு ஊக்கம் அளிப்பதும், இராணுவத்தில் சேரும்இளைஞர்களை ஊக்குவிப்பதுமே இதன் முக்கிய நோக்கமாகும்

இந் நிகழ்வுகளுக்கான ஒத்துழைப்பினை சகல தரப்பினரிடமிருந்தும் அரசு கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது (உ)

# சர்வதேச கப்பல் அணிவகுப்பு விரைவில் இந்தியாவில்

(கொழும்பு)

சர்வதேச கப்பல் அணிவகுப்பு ஒத்திகை ஒன்று மிக விரைவில் இந்தியாவில் நடைபெறவுள்ளது.

இந்த ஒத்திகையில் பாகிஸ்தான், சீனா ஆகிய நாடுகள் பங்குபற்றாது என எதிர் பார்க்கப்படுகின்றது.

இதேவேளை அமெரிக்கா ரஷ்யா போன்ற நாடுகள் உட்பட பல சர்வதேச நாடுகள் கலந்து கொள்ளவுள்ளதுடன் இலங்கையும் பங்குபற்றவுள்ளது.

இந்த நிலையில் பாகிஸ்தான் இராணுவ தளபதியின் கொழும்பு விஜயம் பலத்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. (உ-5)

# தொழுநோய்விழிப்புணர்வு நிகழ்வு சுழிபுரத்தில்

(சங்கானை)

சுழிபுரம் பொது சுகாதார பரிசோதகர் பிரிவில் தொழுநோய் விழிப்புணர்வு நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

கடந்த வாரம் நடைபெற்ற தொழுநோயாளர் தினத்தையொட்டி சென்ற சனிக்கிழமை மேற்படி பிரிவில் சுகாதார பரிசோதகர் வே. ரதீஷன் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில், சுமார் 75 இற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் ''தொழுநோயும் அதன் பாதிப்புகளும்'' என்றவிளக்கமும், அதற்கான தடுப்பு முறைகளும் விரிவாக விளக்கப்பட்டன.

அத்துடன் சுழிபுரம்-கம்பளைப் பகுதியில் இந்நோய் பற்றிய 'சுகாதார கல்வி' வீடியோ படக்காட்சியும் காண்பிக்கப்பட்டது.

மேலும் இந் நடவடிக்கைகள் வழமைபோல் பாடசாலை மற்றும் பொது இடங்களை மையமாக வைத்து செயற் படுத்தப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை. யாழ்ப்பாணத்திலேயே தொழுநோயாளர்கள் அதிகம் உள்ள பகுதியாக மேற்படி பகுதி விளங்குவதல் அப்பகுதியிலும், சூழவிருக்கும் பிற பகுதிகளிலும் இந் நடவடிக்கைகள் விரிவுபடுத்தப்பட்டு இந்நோயின் அறிகுறிகள் மருத்துவ வசதிகள் பற்றி மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும் எனவும் கோரப் பட்டுள்ளது. (உ-ப-18)

## வீதி திருத்தம்

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணம் பழைய பூங்கா வீதி யாழ் மாநகர சபை உறுப்பினர்களால் அதன் அருகிலுள்ள பற்றைகள் புற்கள அகற்றப்பட்டு சுத்தம் செய்யப்பட்டு வருகின்றது.

மேல் நீதிமன்றத்திற்குச் செல்லும் பாதை இதுவாகையால் சுத்தமாக்கும் பணிகள் துரிதமாகவும் செவ்வனேயும் நடைபெற்று வருவதை அவதானிக்க முடிகின்றது. (உ-59)

# விடுதலைப் புலிகளுக்கு ஒருபோதும் உதவவில்லை

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் ஒருபோதும் உதவிகள் செய்தது கிடையாது. இவ்வாறு நாம் உதவி செய்வதாக தவறான கருத்தை பொதுமக்கள் மத்தியில் பரப்புவதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இவ்வாறு இலங்கை செஞ்சிலுவைச்சங்க புத்தளம் மாவட்டக் கிளைத்தலைவர் சாள்ஸ் றெக்ஸி தெரிவித்துள்ளார்.

அல்லலுறும் மக்களுக்கு இனமத மொழி வேறுபாடின்றி உதவுவதே செஞ்சிலுவைச் சங்கத்தின் நோக்கமாகும்.

புத்தளம் பகுதியில் சூறாவளி மற்றும் வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணப் பொருட்களை அன்பளிப்புச்செய்து உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். (செ)

# ஏழு பேரின் வழக்கு விசாரணை ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு யாழ் நீதி மன்றத்தில் விசாரணைகளுக்கு உட்படுத்தப் பட்டுவந்த 7 பேரின் வழக்கு விசாரணைகள் வரும் 13ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டதுடன் 6 பேரை விளக்க மறியலில் வைக்குமாறும் யாழ் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

செல்வராசா மணிவண்ணன் யாழ்ப்பாணம், சின்னத்துரை விஜயருசன் உரும்பிராய், வல்லிபுரம் கருணாகரன் மிருசுவில், நடராசா சொர்ணலிங்கம், கிளிநொச்சி, நாகலிங்கம் யேசுதாஸ், கொடிகாமம், காத்திகேசு சுசிந்தன் கொக்குவில் ஆகியோரைவிளக்க மறியலில் இடுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. [உ-12]

# இடிபாடுள் சிக்குண்டவர் உயிருடன் மீட்பு

(புதுடில்லி)

இந்தியாவில் கடந்த வெள்ளிக் கிழமை ஏற்பட்ட பூமியதிர்ச்சியின் போது கட்டட இடிபாடுகளுக்குள் சிக்குண்டு இருந்த தொண்ணூறு வயது மூதாட்டி ஒருவரும் இரண்டு சிறுவர்களும் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.

இந்தியாவின்குஜ்நகரத்தில் ஏற்பட்ட பூமியதிர்ச்சியின் போது இடிபாடுகளுக்குள் சிக்குண்டு மூன்று நாட்களின் பின் உயிருடன் மீட்கப்பட்டுள்ளமை அதிகாரிகளை வியப்பில் ஆழ்த்தி உள்ளது.

இதுபோன்று மேலும் பலர் உயிருடன் சிக்குண்டு இருக்கலாம் எனவும், இது பற்றி இன்னமும் தெரியவரவில்லை எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (செ)

# உலகை உலுப்பிய பூமியதிர்ச்சி அனர்த்தம்

(லண்டன்)

ஆசிய பிராந்தியத்தில் கடந்த 50 வருடத்தில் இடம் பெற்ற பூமி அதிர்ச்சியில் மிகவும் பெரியது குஜராத் பூமி அதிர்வு என நோக்கர்கள் தெரிவிக்கின்றனர்.

இதற்கு முற்பட்ட காலங்களில் மிகவும் பெரிய பூமி அதிர்ச்சி மத்திய சீனாவில் 1556 ஆம் ஆண்டு ஏற்பட்டது இதன் போதுஎட்டுஇலட்சத்து முப்பதாயிரம் மக்கள் இறந்துள்ளனர்.

1976 ஆம் ஆண்டு யூலை 27 இல் நாம்ஷனில் ஏற்பட்ட பூமி அதிர்வில் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் பேர் இறந்துள்ளனர். 1999 ஆகஸ்ட் 17 ஆம் திகதி துருக்கியில் ஏற்பட்ட பூகம்பத்தில 15 ஆயிரத்து600 பேர் இறந்துள்ளனர்.

இதனைத்தவிர 1999 செப்டம்பர் 21 இல் தாய்லாந்தில் 2000 பேரும் 1999 ஜனவரி 25 ஆம் திகதி கொலம்பியாவில் ஆயிரத்து 770 பேரும், 1998 மே 30:ம் திகதி ஆப்கானிஸ்தானில் 4000 பேரும் 1995 ஜனவரி 17 இல் ஜப்பானில்6 ஆயிரத்து 430 பேரும், 1996 மே 28 இல் ரஷ்யாவில் ஆயிரத்து 989 பேரும் 1997 மே 10 இல் ஈரானில் ஆயிரத்து 560 பேரும் பூமி அதிர்வுகாரணமாக இறந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-9)

# நவாலி முருகானந்தா வி.கழகம் சாம்பியனானது

(மானிப்பாய்)

வலி தென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையேயான கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியில், நவாலி முருகானந்தா விளையாட்டுக் கழக அணியும் இளவாலை யங்கென்றிஸ் அணியும் தெரிவு செய்யப்பட்டன.

இறுதி ஆட்டம் அண்மையில் கட்டுடை ஞானவைரவர் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் நவாலி முருகானந்தா விளையாட்டுக் கழக அணி தொடர்ந்து வென்றதன் மூலம் சண்டிலிப்பாய் பிரதேசசாம்பியன் ஆகியது.

இதில் சிறந்த விளையாட்டு வீரனாக முருகானந்தா அணியைச் சேர்ந்த பொ.கிருபானந்தன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இக் கழகம் தொடர்ந்து நான்கு வருடங்கள் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் சாம்பியன்பட்டத்தை தனதாக்கிக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (உ-120)

# கப்பம் பெற்றவருக்கு 2 வருடசிறைத்தண்டனை

[வவுனியா]

தமிழீழ விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் என நடித்து வர்த்தகர்களிடம் கப்பம் பெற்று வந்த நபருக்கு வவுனியா மாவட்ட நீதிமன்றம் இருவருடகால சிறைத்தண்டனை விதித்துள்ளது.

மேற்படி நபர்,விடுதலைப் புலிகளின் சின்னம் பொறிக்கப்பட்ட கடிதங்கள், ஆவணங்கள் என்பவற்றைத் தயாரித்து வைத்திருந்தார் எனவும் இவற்றை கிளர்ச்சித் தடுப்பு பொலிஸார் கைப்பற்றியுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

அத்துடன், இவர் வசமிருந்த 15ஆயிரம் ரூபா பணத்தினையும் பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்

மேற்படி நபருக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் இடையில் எந்தவிதமான தொடர்பும் இல்லை என விசாரணைகளின் பின் கிளர்ச்சித் தடுப்புப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (உ29)

# இமயமலைப் பகுதியில் ஏற்பட்ட மாற்றமே பூமியதிர்ச்சிக்குக் காரணம்

(கொழும்பு)

இமயமலை அமைந்திருக்கும் பகுதியின் கீழே பூமியின் மேற்தட்டுகள் மோதிக் கொண்டதன் எதிரொலியாகவே குஜராத்தில் பாரிய பூகம்பம் ஏற்பட்டிருக்கலாம் என விஞ்ஞானிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

1819 ஆம் ஆண்டிலும் குஜ் பகுதியில் 7 5 ரிச்சர் அளவுடைய பூகம்பம் தாக்கியதாகவும் இதன் காரணமாக 90 கி.மீ. நீளமுடைய மணல் சுவர் போன்ற ஒன்று உருவானதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ)

நோர்வே தூதுக்குழுவை

# இலங்கைப் படையினரே புலிகளின் தலைவரிடம் அழைத்துச்சென்றனரா

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே பிரபாகரனிடம், இலங்கை இராணுவம் தன்னை அழைத்துச் சென்றதாக இலங்கைக்கான நோர்வேயின் தூதுவர் ஜோர்ன் பேர்க் தெரிவித்துள்ளார்.

கடந்த திங்களன்று பௌத்த சம்மேளனப் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின் போது, இலங்கையில் உள்ள இலங்கைப் படையினருக்கே பிரபாகரன் எங்கிருக்கிறார் எனத் தெரியாது

அவ்வாறிருக்க நீங்கள் எவ்வாறு விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் பேச்சுக்களை நடத்தினீர்கள் என பௌத்த பிக்கு ஒருவர் கேள்வியெழுப்பினார்.

அதற்கு விடையளித்த போதே இலங்கை இராணுவமே தம்மை அழைத்துச் சென்றதாக கூறினார்.

ஆனால் எந்தளவு தூரம் வரை இராணுவத்தினர் அழைத்துச் சென்றனர் போன்ற விபரங்களை அவர் வெளியிடவில்லை.

இலங்கையில், யுத்தத்தினால் ஏற்படும் உயிர் அழிவுகளை முடிந்தளவு குறைப்பதே நோர்வேயின் நோக்கம் எனவும் இக் கலந்துரையாடலின்போது நோர்வே தூதுவர் உறுதிபடத் தெரிவித்தார். [உ-09]

## செய்திப்பரல்

★ நேதாஜி சுபாஸ் சந்திர போஸ் இறந்தது உண்மை என ஜப்பானிய டாக்டர்கள் ஊர்ஜிதம் செய்துள்ளனர்.

★ இந்தியா மேட்டூரில் நிலச்சரிக் குவியல் சரிந்ததில ஐந்து பெண்கள் பலியாகி உள்ளனர்.

★ குஜராத்தில் இடிபாடுகளிடையேசிக்கியோரை மீட்பதற்கு சர்வதேச நிதி நிறுவனங்களிடம் இந்தியா உதவி கோரி உள்ளது.

★ இருதரப்பு உறவும் நீடிக்க வேண்டும் என வலியுறுத்தி இஸ்ரேலிய பிரதமருடன் புஷ் தொலை பேசியில் உரையாடினார்.

★ குஜராத்தை பூமி அதிர்ச்சி தாக்கிய வேளை அப்பகுதியில் பிறந்த குழந்தைக்கு பெற்றோர் 'பூகம்பம்' எனப் பெயரிட்டுள்ளனர். (உ-09)

# விடுதலைப் புலிகளை வற்புறுத்துக?

(கொழும்பு)

தமிழ்க்கட்சிகள் மற்றும் குழுக்கள் தூதுவராலயங்களிற்கு சென்று யுத்தநிறுத்தம் ஒன்றினை கொண்டுவர உதவும்படி அவர்களை வற்புறுத்துவதை விடுத்து, நாட்டில் நிரந்தர சமாதானம் ஒன்று ஏற்பட விடுதலைப் புலிகளிடம் திடமான யோசனைகளை முன்வைக்குமாறு கேட்கும்படி விசேட ஊடக நிலையம் விடுத்துள்ள அறிக்கை ஒன்று தெரிவிக்கின்றது. (உ-9)

# பாதை மாற்றம்

(மந்திகை)

வடமராட்சியிலிருந்து வரணி ஊடாக கொடிகாமம் செல்வதற்கான பிரதான பாதையில் அம்மா கடையடியிலிருந்து 8ம் கட்டை பகுதி வரையான பிரதான வீதி துண்டிக்கப்பட்டு தற்காலிகமாக அமைக்கப் பட்டுள்ள பாதை மக்கள் பாவனைக்கு விடப்பட்டுள்ளது.

இப்பாதை, மணல் போட்டு அமைக்கப்பட்டுள்ளமையால் தென்மராட்சிப் பகுதிகளிலிருந்து வரும் பிரயாணிகள், வியாபாரிகள் போன்றோர் பல்வேறு அசௌகரியங்களை எதிர் நோக்குகின்றனர். (உ-23)

# இறுதியாட்டம்

[கரணவாய்)

கரவெட்டிப்பிரதேசசெயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான வருடாந்த தடகளப் போட்டியின் வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி இறுதியாட்டம் இன்று பி.ப. 3 30மணியளவில் வதிரி லயன்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இவ்இறுதியாட்டத்தில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வதிரி பொமர்ஸ் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. [உ- 27)

# கரபந்தாட்ட இறுதியாட்டம்

(கரணவாய்)

பருத்தித்துறைபிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பதிவு செய்த, கழகங்களிற்கிடையிலான கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் கடந்த சனிக் கிழமை பருத்தித்துறைஐக்கிய விளையாட்டுக்கழக மைதானத்தில் விளையாட்டு அலுவவலர் செல்வி எஸ் நளாயினி நெறிப்படுத்தலில் நடைபெற்றது.

இவ்இறுதி ஆட்டத்தில் கெருடாவில் அண்ணா விளையாட்டுக்கழகம் அதனை எதிர்த்து விளையாடிய பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகத்தை 3; 1என்றநேர் செக்கனில்வென்று இவ்வருட சம்பியன் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.

இச்சுற்றுப் போட்டிகளிற்கு நடுவர்களாக எஸ். வசந்தகுமார், எ. பவானந்தன், ஆகியோர் கடமையாற்றினர்.

இப்போட்டியில் சுமார் எட்டு கழகங்கள் பங்கு பற்றியமை குறிப்பிடத்தக்கது. (உ - 27)

# பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

இம் மாதம் 28ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி, வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாகத் தரப்படுகின்றன.

### சங்கானை

| | |
|---|---|
| 173729 ஏ | 174864 ஏ |
| 174864 பி | 174999 ஏ |
| 178721 ஏ | 178963 ஏ |
| 178963 பி | 179050 ஏ |
| 179082 ஏ | 179082 பி |
| 179155 ஏ | 179155 பி |
| 179155 சி | 179155 டி |
| 179236 ஏ | 179721 பி |
| 179721 சி | |

### கரவெட்டி

| | |
|---|---|
| 130879 ஏ | 142661 ஏ |
| 142661 பி | 143516 ஏ |
| 143516 பி | 143516 சி |
| 143516 டி | 146031 ஏ |
| 146031 பி | 146031 சி |
| 153618 ஏ | 153619 பி |
| 153619 சி | 153619 டி |
| 153714 ஏ | 153714 பி |
| 154620 ஏ | 154932 ஏ |
| 154932 பி | 155064 ஏ |
| 155064 பி | 155735 ஏ |
| 155735 பி | 155792 ஏ |
| 155792 பி | 155792 சி |
| 155792 டி | 160126 ஏ |
| 160270 ஏ | 169270 பி |
| 160270 சி | 162074 ஏ |
| 164659 ஏ | 164659 பி |
| 165032 ஏ | 165032 பி |
| 165344 ஏ | 167325 ஏ |
| 167325 பி | 167325 சி |
| 167325 டி | 167325 ஈ |
| 167337 ஏ | 167337 பி |
| 167337 சி | 167337 டி |
| 167794 ஏ | 167794 பி |
| 167794 சி | 167820 ஏ |
| 167820 பி | 168168 ஏ |
| 168168 பி | 169550 ஏ |
| 169764 ஏ | 169764 பி |
| 169783 ஏ | 169893 ஏ |
| 169893 பி | 169905 ஏ |
| 172154 ஏ | 172154 பி |
| 172156 ஏ | 172156 பி |
| 172156 சி | 172208 ஏ |
| 172225 ஏ | 172387 ஏ |
| 172483 ஏ | 172483 பி |
| 174256 ஏ | 174263 ஏ |
| 174447 ஏ | 174447 பி |
| 174447 சி | 174537 சி |
| 174628 ஏ | 174648 ஏ |
| 174648 பி | 174660 ஏ |
| 174660 பி | 174674 ஏ |
| 174674 பி | 174697 ஏ |
| 174697 பி | 174697 சி |
| 176040 ஏ | 176041 ஏ |
| 176074 ஏ | 177088 ஏ |
| 176088 பி | 176113 ஏ |
| 176113 பி | 176152 ஏ |
| 176152 பி | 176152 சி |
| 176159 ஏ | 176160 ஏ |
| 176168 ஏ | 176168 பி |
| 176215 ஏ | 176237 ஏ |
| 176283 ஏ | 176289 ஏ |
| 176292 ஏ | 176292 பி |
| 176292 சி | 176292 டி |
| 176371 ஏ | |

### மருதங்கேணி

| |
|---|
| 168088 ஏ |

### நல்லூர்

| | |
|---|---|
| 178629 ஏ | 179028 ஏ |
| 179220 ஏ | 179220 பி |
| 179220 சி | 179220 டி |
| 179220 ஈ | 179230 ஏ |
| 179230 பி | 179351 ஏ |
| 179351 பி | 179351 சி |
| 179351 டி | 179429 ஏ |

### பருத்தித்துறை

| | |
|---|---|
| 130879 பி | 140245 ஏ |
| 160129 ஏ | 160129 பி |
| 160129 சி | 164542 ஏ |
| 167263 ஏ | 167373 ஏ |
| 167394 ஏ | 168125 ஏ |
| 168125 பி | 174234 ஏ |
| 174459 ஏ | 174459 பி |
| 174475 ஏ | 174475 பி |
| 174519 ஏ | 174529 ஏ |
| 174599 ஏ | 174599 பி |
| 174599 சி | 174599 டி |
| 174599 ஈ | 174614 ஏ |
| 174614 பி | 174617 ஏ |
| | 174617சி |
| 174617 பி | 174619 ஏ |
| 174619 பி | 174687 ஏ |
| 176116 ஏ | 176192 ஏ |
| 176213 ஏ | 176225 ஏ |
| 176225 பி | 176241 ஏ |
| 176241 பி | 176245 ஏ |
| 176316 ஏ | 176353 ஏ |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 178991 ஏ | 178991 பி |
| 179086 ஏ | |

### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 179172 ஏ | 179172 பி |
| 179269 ஏ | 179269 பி |

### உடுவில்

| | |
|---|---|
| 174866 ஏ | 174866 பி |
| 174866 சி | 179147 ஏ |

மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

ஆற்றுவார் ஆற்றல்இகழாமை போற்றுவார்
போற்றலு ளெல்லாம் தலை
.... குறள்

## வலம்புரி

### காவிக்குள் துறவில்லை

நோர்வேயின் சமாதான முயற்சி வெற்றி பெறவேண்டுமென இலட்சக்கணக்கான இலங்கை மக்கள் ஆத்மார்த்தமான பிரார்த்தனையில் ஈடுபட, தென்னிலங்கையில் பௌத்த பிக்குமார் எப்படியும் இச்சமாதானமுயற்சியை தடை செய்து விட வேண்டுமென்பதில் கங்கணம் கட்டிக்கொண்டு புறப்பட்டு விட்டனர்.

நேற்று முன்தினம் புத்தரின் போதனையை பின்பற்றுகிறோம் எனக்கூறிக் கொண்டு மெய்யெல்லாம் மஞ்சள் தரித்து மனதினுள் கறுப்பு வைத்த பிக்குமார் கூட்டமொன்று இலங்கைக்கான நோர்வேயின் தூதுவர்ஜோன்வெஸ்பேக்கைச் சந்தித்து இலங்கையின் இனப்பிரச்சினையில் சமாதான முயற்சியில் ஈடுபடக் கூடாதெனக் கோரியுள்ளனர்.

கடந்த இருபது வருடங்களாகஇலங்கையில் இடம் பெற்று வரும் இனயுத்தத்தினால் பல்லாயிரக்கணக்கான உயிர்கள் மடிந்து ஒழிந்தன, சொத்துக்கள் அழிவுற்றன. இந்நிலையில் பிற உயிர்களுக்கு இம்மியளவும் இம்சை செய்யாது வாழ வேண்டும் என வையகத்திற்கு உரைத்த போதிமாதவனின் போதனையைப் போதிக்க புறப்பட்ட புத்த பிக்குகள் சமாதான முயற்சியில் நோர்வே தலையிடக் கூடாதென கோரியுள்ளனரெனில் அதன் பொருள் இலங்கையில் சண்டை தொடர்ந்து இடம்பெற வேண்டும். அதன் மூலம் சிறுபான்மையினமான தமிழ் மக்கள்அழிக்கப்பட வேண்டுமென்பதேயாகும்.

பிறஉயிர்க்குத் தீங்கு விளைவிக்காமல் தன்னுயிர் போல் மன்னுயிர் பேணவேண்டிய பௌத்த

# அன்பு, ஒழுங்கு, நல்லெண்ணமுடைய செயலே

# மானுட தர்மத்தின் மாண்பினை உயர்த்தும்

**வாசுகி குணராஜா**
ஆசிரியை
யா. கொட்டடி நமசிவாயவித்தியாலயம்

தர்ம வாழ்வானது இன்று தன்னிழல் மறைந்து அதர்ம வாழ்வின் ஆட்சிப் பிடியில் அமுங்கிக் கிடக்கிறது. அவ்வாறு அரக்கப் பிடியில் அமுங்கிக் கிடக்கும் தர்ம வாழ்வினை மீட்டிட வேண்டிய தேவையும் அதனைத் தெளிவுற வைக்க வேண்டிய அவசியமும் இந்த கலியுகத்தில் பிரதானமான சேவையாகும்.

### உண்மைகள் உறங்கி விட்டன

தர்மம் ஏன் இன்று தலை தாழ்ந்து கிடக்கிறது. ஆம். எமது உள்ளங்களில் உண்மைகள் உறங்கி வெகுகாலமாகி விட்டது. வெறும் ஊமங்கள் எங்களை வழி நடத்துகின்றன எங்களின் இதயங்கள்மரத்து. எமது மானுட தர்மத்தை என்றோ தொலைத்து விட்டன. இன்றைய பெரளவுக் கல்வி அதனை மறைத்து எம்மை தர்மத்தையே மறக்கச் செய்து விட்டன. ''வாழ்க்கை வாழ்வதற்கே'' அதனை எப்படியும் வாழ்ந்து க(ளி)ழிப்போம் என்ற சிந்தனைச்சிதறல்கள்எமதுமானுட தர்மத்தையே சிதற வைத்து விட்டது.

### வரையறையில்லை

மானுட வாழ்வினை சிறப்புற தாம வழியில் வாழும் முறையினைக் கொடுப்பது கல்வி. அப்படியாயின் வாழ்வியல் தர்மம் கூறுவது என்ன? அதாவது 'நமது நாளாந்த வாழ்வின் கடமைகளை சிறப்புற ஒழுக வைப்பதே எமது தர்மம் எனலாம். இதனையே எமது இதிகாச புராணங்களும் அறிவுறுத்துகின்றன. இங்கே தர்மத்தை நாம் எல்லையிட்டு வரையறுக்க முடியவில்லை. ஏனெனில் ஒருவன் செய்யும் தர்மம் மற்றவனுக்கு அதர்மமாகத் தோன்றும். எதனையும் நாம் திரிபறக் கற்க வேண்டும். நடக்க வேண்டும். அப்படி நடப்போமெனில் அதுவே மானுடதர்மம். ஆனால் நாங்கள் எதனையும் கற்க நிற்கும் அளவிற்கு அதனைச் செயலில் காட்ட முன் வருவது இல்லை. இதனாலேயே அதர்மம் மேலோங்கி நிலைத்து நிற்கின்றது. இந்த நிலையிலே மானுட தர்மம் எப்படி எம்முடன் நிலைத்து நிற்க முடியும்.

### இதய அழுக்குகள்

எமது இதயம் முழுவதும் கொழுப்பினால் கொலஸ்திரோல் படிந்து குருதி ஓட்டத்தைக் குறைத்து எப்படி இதய நோய் ஏற்படுகின்றதோ அதே போன்று அழுக்கானஎண்ணங்கள் எழுச்சி பெற்றுஎமதுநல்ல எண்ணச் சிந்தனைகளை அடிமைப்படுத்தி சிறைப்படுத்தி விடுகின்றன. இத்தகைய அழுக்குகளை நீக்க நாம் முயல வேண்டும்.

''அழுக்காறு அவாவெகுளி
இன்னாச் சொல் நான்கும்
இழுக்கா இயன்றதறம் ''

இத்தகைய இதய அழுக்குகளை இனங்கண்டு நம் உள்ளத்தை தூய்மைப்படுத்துவோமெனில் அதுவே தர்ம நெறி, அறம், இத்தகைய ஆசை, பொறாமை, பொய் பேசுதல் போன்ற பல தீய செயல்கள் எமது வாழ்வில்பல பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றது. இத்தகைய இதய அழுக்குகள் நம்மைத்தினம் தோறும்தீயவழியில்வளர்த்து வருகிறது.

### அதர்ம வாழ்வு

இன்று தர்ம வாழ்வுக்கான பாதை அடைபட்டுக் கிடக்கின்றது. தர்ம வாழ்வில் செல்ல முற்படும் பலர் பல துன்பங்களை சுமைகளைத் தாங்கிக் கொள்ள வேண்டியவர்களாகின்றனர். ஆனால் அதேவேளை, அதர்ம வாழ்வினை மேற்கொள்ளும் பலர் ஆனந்தமாய் வாழ்ந்து வருகிறார்கள். இந்தக் கலியுகத்திலே தர்ம வாழ்விலே செல்பவனை சமூகம் ஏதோ அருவருப்பான செயலைச் செய்பவன் போன்று அடித்து அமர்த்துகின்றது. தர்மம் செய்பவனை செய்ய நினைப்பவனை புழுவாய் மதிக்கிறது. அதர்மமா? தர்மமா? அறம் எனத்தெரியாதளவிற்கு அதர்மம் இன்று தன்னை உரமூட்டி வளர்த்து வருகிறது.

### எது தர்மம்?

நமது நாளாந்த செயற்பாடுகளை அன்புடனும் ஒழுங்குடனும். நல்லெண்ணத்துடனும் செயற்படுத்துவோமெனில் அதுவே சிறந்த மானுட தர்மம் எனலாம் இதனையே பகவான் ஸ்ரீ சத்தியசாயிபாபா 'எமது நாளாந்த வாழ்வின் கடமைகளில் எண்ணமும் செயலும் அன்பு நிறைந்து நடந்தேறுமாயின் அதுவே சிறந்த தர்மம் என்கிறார். நமது வாழ்வில் நாம் செய்யும் செயல்கள் அனைத்தும் ஒழுங்கானதாகவும்கட்டுப்பாடுள்ளதாகவும் அன்புடையதாகவும் இருக்குமெனில் நமது கடமைகள் அனைத்தும் சரியான முறையில் நடந்தேறும் எனில் அதுவே தர்மம் எனலாம்.

யாசிப்பவனுக்கு ஓடிச் சென்று பிச்சை இடும் நாங்கள் நம்முடன் ஒட்டி உறவாடும் பலர் உண்ண வழியின்றி இருப்பதைப் பொருட்படுத்துவதில்லை. தனது பெற்றவரை அன்ன மிடாமல் வயோதிபர் மடத்தில் விட்டவன் கோயிலிலே பெயருக்காக அன்னதானம் செய்வானாயின் அங்கு தர்மம் நிகழ்வதாக எண்ண வேண்டாம் வீட்டிலே தனது கடமையை அன்புடன் சரிவரச் செய்ய முடியாதவன் ஒரு போதும் தர்மவாழ்வில் நிற்க முடியாது. அவ்வாறெனில் தர்மம் எது?

பள்ளி செல்லும் மாணவனோ ஆசிரியனோ முதலில் பள்ளிக்கு குறித்த நேரத்திற்குள் செல்வானாயின் அதுவே ஒரு பெரிய தர்மம். தந்தையானவன் தன் பிள்ளைகள் சிறப்புறக் கல்வி கற்க வழியமைத்துக் கொடுப்பானாயின் அதுவே தந்தையின் சிறந்த தர்மம் நாளாந்த வாழ்வில் நாலுபேருக்கு நல்லது செய்ய நினைப்பதும் செய்வதும் பெரிய தர்மம். இயலாதவனுக்கும், ஏழைகளுக்கும் இரங்குவோமெனில் அதுவும் தர்மம். நாளாந்தக் கடமைகளை ஒழுங்கு தவறாது செய்தல் தர்மம். வியாபாரி கொள்ளை இலாபம் பெறாது பொருட்களைப் பதுக்காது நடப்பது தர்மம். தனது மொழியினை சிறப்பாய்ப் பேசுவதும் எழுதுவதும் தர்மமே. தனது மதத்தின் ஒழுங்கைக் கடைப்பிடித்தலும் தர்மமே. நமது நாளாந்த வாழ்வில் ஏதோ ஒரு சேவையைப் பரிபூரணமான அன்புடன் செய்வோமெனில் அதுவே தர்மம். மானுடதர்மம்.

இத்தகைய தர்ம வாழ்வு தான் எம்மையும் இறைவனையும் நெருங்க வைக்கிறது இந்தப் பிறவிப் பெருங்கடலைக் கடப்பதற்கான சிறந்த வழி தர்மமே.

'தர்மம் தலைகாக்கும்
தக்க சமயத்தில் உயிர்காக்கும்'

இத்தகைய மானுட தர்மமே இந்த மானுட வாழ்வின் சிறந்த வழிகாட்டி இத்தகைய மானுட தர்மம் இருள் சூழ்ந்தாலும் நாம் அவ்விருளை அகற்றி ஒளியேற்றி மானுட தர்மத்தை மறுபடி மீட்டெடுப்போம்

'தர்மத்தின் வாழ்வதனைச்
சூது கவ்வும்
தர்மம் மறுபடி வெல்லும்'

# கைதிகள் காலவரையறையின்றி

# காவலில் இருக்க வேண்டியதில்லை

### திருடர் தொல்லை

கொழும்புத்துறை மேற்கு, துண்டி, வளன்புரம், சுவாமியார் வீதிப் பகுதிகளில் பகல் நேரத்தில் திருடர் தொல்லை அதிகரித்துக் காணப்படுகிறது

வேண்டும். அதன் மூலம் சிறுபான்மையினமான தமிழ் மக்கள் அழிக்கப்பட வேண்டுமென்பதேயாகும்.

பிறஉயிர்க்குத் தீங்கு விளைவிக்காமல் தன்னுயிர் போல் மன்னுயிர் பேணவேண்டிய பௌத்த துறவிகள் நோர்வேயின் சமாதான முயற்சியை குளப்ப நடவடிக்கைஎடுக்கிறார்களெனில் அவர்களின் துறவு காவியால் மட்டும் கட்டப்படுகிறதேயொழிய உடல், உளத் துறவை — தூய்மைகளை வெளிக்காட்டவில்லை.

பௌத்த நாடு என்று பெருமை கொள்ளும் இலங்கையில்சிறுபான்மையினத்திற்கு உரிமைகளை வழங்குவதில் பௌத்த மதகுருமாரே தடையாகவுள்ளார்களெனில் அவர்களைப் பின்பற்றும் சிஹல உறுமய, ஜே.வி.பி போன்றவையின் நிலைப்பாட்டை உலகு புரிந்து கொள்வதில் கடுமை இருக்கமுடியாது.

நோர்வேயின்சமாதான முயற்சிக்கே பௌத்த பிக்குகள் இவ்வெடுப்பென்றால் சுயமாக முன் வந்து எக்காலத்திலாவது இவர்கள் தமிழர்களுக்குஉரிமை கொடுப்பார்களா என்பதை சர்வதேசம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

# கைதிகள் காலவரையறையின்றி காவலில் இருக்க வேண்டியதில்லை

## உயர் நீதிமன்ற ஆரம்ப விழாவில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கைதிகள் காலவரையறையின்றி காவலில் இனி இருக்க வேண்டியதில்லை. கடசிக்காரர்கள் கலவரப்பட்டு கொழும்பையும் இதர இடங்களையும் நோக்கிச் செல்ல வேண்டியதில்லை. தங்களின் திறமையான நிர்வாகத்தின் கீழ் இனிமேல் வடமாகாண நீதிமன்றங்களின் நிர்வாகம் தங்கு தடையின்றி நடைபெறும் என்று நம்புகின்றோம்.

இவ்வாறு, நேற்று இடம்பெற்ற யாழ்.மாவட்ட மேல் நீதிமன்ற ஆரம்ப நிகழ்வில் வரவேற்புரை நிகழ்த்திய சட்டத்தரணி சாந்தா அபிமன்னசிங்கம் குறிப்பிட்டார்.

தொடர்ந்து உரையாற்றுகையில், இதுவரை காலமும் மேல் நீதிமன்றில் ஏதேனும் நிவாரணம் பெறவேண்டியிருந்தால் அதற்கு நாங்கள் வவுனியாவையோ அல்லது கொழும்பையோதான் நாடிச் செல்லவேண்டியிருந்தது.

கைதிகளும் அங்குதான் அழைத்துச் செல்லப்பட்டார்கள். எவ்வளவோ செலவுகள், எவ்வளவோ அலைச்சல்கள், துன்பங்கள் மத்தியில் கட்சிக்காரர் அங்கெல்லாம் அலைக்கழிய வேண்டியிருந்தது. இந்த நிலை இன்று முதல் மாறும்.

குற்றங்களைத் தடுக்க வேண்டுமானால் குற்றவியல் வழக்குகள் தீர்மானிக்கப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்.

அதேபோல் குற்றவியல் வழக்குகள் தீர்மானிக்கப்பட்டால் தான் சமூகத்தில் ஒழுக்கமும் ஓரளவு சமூக நிலையும் ஏற்படக்கூடும்.

இப்பொழுது நடைபெறும் போரின் காரணமாய் இறப்போரின் மரண விசாரணை கூட 2000 ஆண்டு மே மாதம் 3 ஆம் திகதி வெளிவந்த அவசரகால ஒழுங்கு விதியின் 55 ஈ பிரிவின் கீழ் கொழும்பில் பணியாற்றும் மேல் நீதிமன்றிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பல சட்டங்களால் உங்களுக்கு அளிக்கப்பட்ட முழுமையான குற்றவியல் அதிகாரம் குறைக்கப்பட்டுள்ளமை மனவருத்தத்திற்குரியதே.

முக்கியமாக அவசரகால ஒழுங்குவிதிகளின் கீழ் பறிக்கப்பட்டுள்ள உரித்து வடக்கு கிழக்கு மாகாணங்களில் போர் வீரர்களால் மக்களுக்கு ஏற்படும் ஆபத்தை உடனுக்குடன் நடவடிக்கை எடுத்து ஓரளவு குறைக்க வாய்ப்பின்றி ஆகிவிட்டது. என்றார்.

(உ-12-59-77)

## திருடர் தொல்லை

கொழும்புத்துறை மேற்கு, துண்டி, வளன்புரம், சுவாமியார் வீதிப் பகுதிகளில் பகல் நேரத்தில் திருடர் தொல்லை அதிகரித்துக் காணப்படுகிறது

ஆட்கள் இல்லாத வீடுகளில், பட்டப் பகல் வேளை புகும் திருடர்கள் வீட்டின் கதவுகள் ஜன்னல்கள் என்பவற்றை திருடிச் செல்வதுடன் அங்குள்ள பயன்தரு மரங்களையும் தறித்துச் சென்று விடுவதாக தெரியவந்துள்ளது.

(உ-104)

## கரப்பந்து, வலைப்பந்து இறுதிச்சுற்றுப்போட்டிகள்

(சரணவாய்)

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவிலுள்ள பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியும் வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியும் கடந்த ஞாயிற்றுக்கிழமை செயலக விளையாட்டு அலுவலர் எ. வசந்தனின் நெறிப்படுத்தலில் நடைபெற்றது.

புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டத்தில் தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக்கழகம் அதனை எதிர்த்து விளையாடிய ஊர்காவற்றுறை அண்ணா முன்னேற்றக் கழகத்தை வென்று சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

இப் போட்டிக்கு நடுவர்களாக எஸ். வசந்தகுமார் வி. கிரிதரன் ஆகியோர் கடமையாற்றினர்.

அதேநேரம் ஊர்காவற்றுறை புனித மாரியாள் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டத்தில் காரைநகர் சோலையான் விளையாட்டுக் கழகம் அதனை எதிர்த்து விளையாடிய ஊர்காவற்றுறை அண்ணா முன்னேற்றக் கழகத்தை வென்று சம்பியன் கிண்ணத்தைதனதாக்கிக் கொண்டது.

இப்போட்டிகளிற்கு நடுவர்களாக எ. பவானந்தன் பி. யோகானந். ஆகியோர் கடமையாற்றினர்.

(உ-27)

# நாணயப் பெறுமதி விவகாரம்

# அரசுக்கு எதிராக ஐ. தே. கட்சி வழக்கு

(கொழும்பு)

இலங்கைமத்தியவங்கி ரூபாவின்பெறுமதியை மிதக்கவிட்டுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் அதனைரத்துச் செய்யுமாறுகோரியும் மேல் முறையிட்டு நீதிமன்றில் ஐக்கியதேசியக்கட்சி வழக்குத் தாக்கல்செய்துள்ளது.

அரசியல்அமைப்புக்கு முரணாக பாராளுமன்றஅங்கீகாரமின்றி ரூபாவின்பெறுமதி மிதக்கவிடப் பட்டுள்ளதெனவும் அதனை ரத்துச்செய்ய வேண்டுமெனவும் ஐக்கிய தேசியக்கட்சி தாக்கல்செய்த மனுவில் குறிப்பிட்டுள்ளது.

மேற்படிமனுவை இக்கட்சியின்சார்பில் அதன்உபதலைவர் காமினி அத்துக்கோறளை மற்றும் கொழும்புமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரவிகருணாநாயக்கா ஆகிய இருவரும் தாக்கல்செய்துள்ளனர். (இ-5)

## தப்பியோடிய படையினர்கைது

இராணுவத்திலிருந்து தப்பி ஓடிய 15 பேரை களுத்துறைப் பொலிசார்கைது செய்துள்ளனர்

கடந்த சில தினங்களாக பொலிஸார் நடத்திய சுற்றிவளைப்பு தேடுதலின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகபொலிஸார்தெரிவித்துள்ளனர். (ந-5)

## நயினா தீவில் காரியாலயம்

நயினாதீவில் ஈ.பி.டி.பி: அமைப்பினர் முதன் முறையாக நீண்டகால இடைவெளிக்குப் பின் நேற்று கட்சிக் காரியாலயம் ஒன்றைத் திறந்துள்ளனர்.

இக்காரியாலயம்ஈ.பி.டி.பியின் யாழ் மாவட்ட பதில் அமைப்பாளர்ந.மதனராஜனினால்திறந்துவைக்கப்பட்டது

இவ் வைபவத்தில் காரைநகர் கடற்படை அதிகாரி தர்மசிறிவர்த்தனா, நயினாதீவு கடற்படை கட்டளை அதிகாரி பண்டார ஆகியோர் கலந்து சொண்டனர்.(ம)

## பிரதேசசெயலகமட்டத்தில் உணவுக் களஞ்சியங்கள்!

யுத்த காலங்களில் யாழ் மாவட்டத்தின் உணவு விநியோகம் எவ்வகையிலும் பாதிக்காத வண்ணம்பிரதேச செயலாளர் மட்டத்தில் உணவுக் களஞ்சியங்களை அமைப்பதற்கு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் திட்டமிட்டுள்ளார்.

இதற்கமைவாக தேவையான விபரங்களை அனுப்பி வைக்குமாறு யாழ். அரச அதிபரை அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் கேட்டுள்ளார்.

இதே வேளை யாழ். மாவட்ட மக்களின் தேவைக்கென கையிருப்பில் இருக்கும் உணவுப் பொருட்களின் விபரங்களையும் ஆணையாளர் அரச அதிபரிடம் இருந்து கோரியுள்ளார். (வ)

## மின்சாரம் தாக்கியதில் இரண்டு யானைகள் பலி

(வவுனியா)

மன்னார் மடு வீதிக்கருகாமையில் மின்சாரம் தாக்கி இரண்டு காட்டு யானைகள் பலியாகியுள்ளன.

இராணுவக் காவல் அரண் பகுதிகளில் உள்ள மின்சார இணைப்பில் இந்த யானைகள் சிக்கியதில் பலியாகியுள்ளன.

இலங்கையில் யானைகளின் வளம் அருகி வரும் நேரத்தில் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளமை கவலை அளிப்பது குறிப்பிடத்தக்கது. (வ)

## கைதானோர் விடுதலை

சிறுப்பிட்டிப் பகுதியில் வைத்து கடந்த ஞாயிறன்று படையினரால் கைதுசெய்யப்பட்ட நால்வரும் விடுதலை செய்யப்பட்டிருப்பதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் உறவினர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைதடிப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து சிறுப்பிட்டிப் பகுதியில் தங்கியிருந்த இரத்தினம் தர்மதாஷன் (வயது 26) கிட்டினன் சிவதாஷன் (வயது 23) இருவரும் வீட்டு உரிமையாளர்களானஸ்ரீஸ் சுந்தராசா திருமதி ஸ்ரீஸ்கந்தராசா புவனேஸ்வரி ஆகியோரும் ஊரெழு இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டமை தெரிந்ததே. [உ-12]

## புலிகளிடமிருந்து...

இருந்தும் நூறு இளைஞர்கள் வீதம் இராணுவத்தில் சேர்வதற்கு அணிதிரளவேண்டும் புலிகளுக்கு எதிரான யுத்தத்தை திட்டமிட்டபடி நடத்துவதற்கு இளைஞர்கள் தயக்கம் காட்டக்கூடாது.

சம்பளம் சலுகைகளை எதிர்பாராமல் போரா...


அருள்வளர்

**ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர்**

**கோவில் நித்தியபூசை ஒழுங்குகள்**

அதிகாலை 6-00 மணிக்கு பூசை நடைபெறும்.
மாலை 6-00 மணிக்கு பூசை நடைபெறும்
விசேடதினமாக சனிக்கிழமைகளில்
**காலை, மதியம், மாலை பூசைகள் நடைபெறும்.**

★ அபிஷேகம் செய்ய விரும்புபவர்கள் சனிக்கிழமைகளில் அபிசேகம் செய்யலாம் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

★ விசேட தினங்களில் (சனிக்கிழமை) காலை 6-00 மணிதொடக்கம் மாலை 6.00 மணி வரை அடியார்களின் வேண்டுகோளிற்கிணங்க திருக்கதவுகள் திறந்திருக்கும் என்பதையும் தெரியப்படுத்துகின்றோம்.

**'லாலா சோப்'**


# குஜராத் நில நடுக்கம் ரணில் ஆழ்ந்த கவலை

(கொழும்பு)

இந்தியாவில் இடம் பெற்ற பூமியதிர்ச்சியால் அந்நாட்டு மக்களுக்கு ஏற்பட்டுள்ளஇழப்புக்கள குறித்து எதிர்க்கட்சித் தலைவர் ரணில்விக்கிரமசிங்க தனது ஆழ்ந்தஅனுதாபத்தை தெரிவித்துள்ளார்.

இந்தியஜனாதிபதி கே.ஆர் நாராயணன், பிரதமர் அடல் பிஹாரிவாஜ்பாய், குஜராத் மாநிலமுதல்வர் கேசுபாய்பட்டேல் ஆகியோருக்கு ரணில் விக்கிரமசிங்க அனுதாபச் செய்திகளை அனுப்பி வைத்துள்ளார்.

பூகம்பத்தினால் இந்தியாவில் ஏற்பட்ட உயிரிழப்புக்கள் சொத்து அழிவுகள் குறித்து நானும் இலங்கை மக்களும் பேரதிர்ச்சியும் கவலையும் அடைகின்றோம். என்று அக்கடிதத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது. [ந-5]

# புதிய டி.ஐ.ஜியாக கீர்த்தி கஜநாயக்கா

(கொழும்பு)

சி.ஐ டி. பணிப்பாளரான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கீர்த்தி கஜநாயக்கா பிரதிப் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த வருடம்அக்டோபர் மாதத்தில் இருந்து இந்திய மனம் நடைமுறைக்கு வரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா, ஜப்பான், இந்தியா, பங்களாதேஷ் ஆகிய நாடுகளில்பயிற்சிபெற்றஇவர் கண்டி சென்ற் அன்ரனிஸ் பழைய மாணவராவர். (வ)

# திருடர்கள் வசமாக மாட்டிக் கொண்டனர்

(மண்டைதீவு)

வேலணை வங்களாவடி சந்திக்கு அருகில் கடந்த சனி இரவு கூரை பிரித்துஇறங்கிய கள்வர்கள் சுமார் 6000 ரூபா பெறுமதியானபொருட்களை திருடிச் சென்றனர் மறு நாள் மது போதையில் திருடர் கூட்டத்தைச் சேர்ந்த ஒருவர் மேற்படி திருட்டின் போது தனக்குகாய மேற்பட்டதாக கூறினார்.

இதனையடுத்து மேற்படி விடயம் கடற்படையினரின் கவனத்துக்கு கொண்டுவரப் பட்டு திருடர்கள் ஊர்வலமாக அழைத்துச் செல்லப் பட்டு தண்டனை வழங்கப் பட்டதுடன் மேலதிக விசாரணையும் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (வ-11)

## யாழ் மேல்நீதிமன்று

குற்றமற்றவர் என்று விடுவிக்கப்பட்ட போதும் மதுபானங்கள் நீதிமன்றத்தின் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்தது.

இதனை ஆட்சேபித்தேமேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தபோது விசாரணையை அடுத்த மாதம் 26 ஆம் திகதிக்கு மேல் நீதிமன்ற நீதிவான் வே.பி.எஸ். வரதாராசா ஒத்திவைத்தார். (வ-உ-12)


**ஸ்ரீ செல்வா**

(யாழ்ப்பாணம்)

முரளி, தேவயானி நடித்த

**கண்ணுக்கு கண்ணாக**

10-30 (ப. நே)
2-30 (ப. நே)


## பாக்தளபதி பல்லகலவவுடன் பேச்சு

(கொழும்பு)

பாகிஸ்தான் ஜனாதிபதி முகமட்யூசுப்கானுடன் இலங்கை இராணுவதளபதி பல்லகலவவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இருவருக்கிடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தை விபரங்கள் வெளிவராத போதும், தற்போது இலங்கையில் இடம்பெறும் இரா...

# ‘லாலா சோப்’

## தொழிற்சாலை

அச்சுவேலி.

(கி/1942)

## லாலாவின்

# அதிர்ஷ்டம்பார்க்கும்நாள்

பாவனையாளர்களே!

**28-02-2001**

1ஆம் பரிசு: 2 பவுண் தங்க நாணயம்

2ஆம் பரிசு: 1 பவுண் தங்க நாணயம்.

3ஆம் பரிசு: 1/2 பவுண் தங்க நாணயம்.

ஒரு சாறி 1000 ரூபாப்படி 6 சாறிகள்

ரிக்கற்றை எல்லாக் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

ரிக்கற் 10/-

லாலா சோப் தொழிற்சாலை

அச்சுவேலி. (கி-1940)


புலிகளுக்கு எதிரான யுத்தத்தை திட்டமிட்டபடி நடத்துவதற்கு இளைஞர்கள் தயக்கம் காட்டக்கூடாது.

### சம்பளம் சலுகைகளை எதிர் பாராமல் போராட முன்வர வேண்டும்

சிங்கள இளைஞர்கள் சம்பளங்களையோ சலுகைகளையோ எதிர்பாராமல் படையில் இணைந்து உதவுவதற்கு முன்வர வேண்டும்.

புலிகளுடன் சமாதானப் பேச்சு வார்த்தைக்கு இடமில்லை அடுத்த மூன்றுவருட காலத்திற்குள் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து புலிகளை வெற்றிகொள்வது உறுதி.

பிரதான அரசியல்க் கட்சி ஒன்று புலிகளின் யுத்த நிறுத்த அறிவிப்பினைக் கருத்தில்க் கொண்டு சமாதான முயற்சிகளில் இறங்கவேண்டும் என்று என்னைக் கோரி வருகிறது. ஆனால்அக் கோரிக்கையை நான் நிராகரித்துள்ளேன் என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார். (வ)

---

சிற்றி---

றவர்களுக்கான பயணச்சீட்டுக்கள் இன்று யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியிலுள்ள மணியம் கட்டடத்தில் வைத்து வழங்கப்படுமென்று ரான் அலுவலக அதிகாரி எஸ். குகராஜன் அறிவித்துள்ளார். (இ)

இருவருக்கிடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தை விபரங்கள் வெளிவராத போதும், தற்போது இலங்கையில் இடம்பெறும் இராணுவ நடவடிக்கைகள் பற்றியதாக பேச்சுக்கள் அமைந்ததென இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. [வ]


## கண்ணுக்கு கண்ணாக

10-30 (ப. நே)

2-3 0 (ப. நே)

CD பிரதி

புதிய வெளியீடு

(கி 1910)



# பதவி வெற்றிடம்

## அலுவலகச் செய்தியாளர்கள்

(ஆண், பெண் இருபாலார்)

தகைமை:

★ க. பொ. த சாதாரண தரத்தில் தமிழ் மொழியில் அதிவிஷேட சித்தியுடன் ஆறுபாடங்களில் சித்தி.

★ க. பொ. த உயர்தரத்தில் தமிழ் மொழியில் விசேட சித்தியுடன் மூன்று பாடங்களில் சித்தி.

★ வயதெல்லை 20 வயது — 40 வயதிற்கு மேற்படாத தகைமையுடைய தற்போது எதுவித வேலையுமின்றியிருக்கும் பத்திரிகைத்துறையில் ஆர்வம் உடையோர் மட்டும் 03-02-2001 (சனிக்கிழமை) அன்று காலை 10.00 மணிக்கு தகைமைகளை நிரூபிக்கும் ஆவணங்களுடன் நேரில் வரவும்.

**முக்கிய குறிப்பு:**

யாழ் நகரிலிருந்து ஐந்து மைல் தூரத்திற்குள் நிரந்தர வதிடத்தைக் கொண்டவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.



இப் பத்திரிகை "வலம்புரி" அன் கோ ஸ்தாபனத்தினரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம், எனும் விலாசத்தில் அமைந்துள்ள அச்சகத்தில் 2001ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.